Registered as a Newspaper பக்கங்கள் 10 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 25 (10-12-93) வெள்ளிக்கிழமை ஓசை 245

## மோட்டார் ஊர்திகளை பரிசோதனை செய்க

கோண்டாவில் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் தங்கள் மோட்டார் ஊர்திகளைப் பதிவு செய்து இதுவரை ஊர்திகளைப் பரிசோதனைக்கு உட்படுத்தாதவர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணி தொடக்கம் மாலை 2-00 மணிக்கு முன்னர் வடமராட்சியில் உள்ளவர்கள் மாலுசந்தி, உடுப்பிட்டி அவசர அனுமதி வழங்கும் அலுவலகத்திலும், தென்மராட்சியில் உள்ளவர்கள் சாவகச்சேரி அவசர (10ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி மீது அதிகாலை அகோர எறிகணை வீச்சு!

## பெண் உடல்சிதறிப்பலி; 4பேர்படுகாயம்

(வடமராட்சி)

**வடமராட்சி குடியிருப்புகள் மீது பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட அகோர எறிகணை வீச்சினால் ஒரு பெண்பலியானார். மற்றும் நால்வர் படுகாயமடைந்தனர். வீடுகள் சேதமடைந்தன. மேலும் நேற்று முன்தினம் இரவும் அப்பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.**

நேற்று அதிகாலை 4.10 மணியளவில் கரணவாய் குடியிருப்புகள் மீது ஆறு ஆட்லறி எறிகணைகள் ஏவப்பட்டன இத் தாக்குதல் அப் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது வீழ்ந்து வெடித்ததில் வீட்டில் நித்திரையிலிருந்த வே. இரத்தினவதி என்னும் பெண்மணி உடல்சிதறிப் பலியானார். இவரது தலைமட்டுமே முழுமையாக மீட்கப்பட்டது.

மேலும் இவருடன் அருகில் நித்திரை செய்துகொண்டிருந்த இவரது மகள் வே. விஜிதா (18) இறந்தவரின் தாய் வ. தெய்வானை (75) ஆகியோர் படுகாயமடைந்து பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களது வீடு பலத்த சேதமடைந்தது.

மேலும் இப்பகுதியில விழு (10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட ப. நோ. கூ. சங்கங்கள் சமூக சேவைப் பகுதிமுன் செவ்வாயன்று மறியல்

(நமது நிருபர்)

யாழ் செயலக சமூகசேவைகள் பிரிவிற்கு எதிரான தமது மறியல் போராட்டம் எதிர்வரும் 14-ம்திகதி நடைபெறும் என யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை ஏகமனதாக முடிவு செய்துள்ளது.

யாழ்.மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், பொது மக்கள் மற்றும் மாணவ உணவுமுத்திரைகளுக்கு வழங்கிய பொருள்களுக்கான கொடுப்பனவை உடனடியாக மேற்கொள்ளுமாறும் தவறும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## உருவப்படம் உள்ளே

பூநகரி-நாகதேவன்துறை கூட்டுத்தளம்மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த முன்னாள் யாழ். மாவட்ட புலனாய்வுத்துறைப்பொறுப்பாளர் லெப் கேணல் அருணனின் (சூட்) உருவப்படம் உள்ளே...

## புதியஇருஇழுவைப்படகுகள் அனுப்ப நடவடிக்கை

(அலுவலக நிருபர்)

இரண்டு இழுவைப் படகுகளை புதிதாக அனுப்பி வைக்க அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் உடன்பட்டிருப்பதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

கொழும்பில்தற்போதுதங்கிநிற்கும் அரச அதிபருக்கு உடனடியாக மூன்று இழுவைப் படகுகளையேனும் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் அவசர செய்தி ஒன்றை அனுப்பி வைத்தது தெரிந்ததே இங்கு சேவையில் ஈடுபட்டிருந்த நான்கு இழுவைப் படகுகளும் பெரும் சேதமடைந்தமை (10ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## பூநகரி படைமுகாமின் அழிவுக்கு நான்மட்டும் பொறுப்பாளி அல்ல

(கொழும்பு)

''பூநகரி முகாமில் ஏற்பட்ட அழிவுக்கு என்மீது மட்டும் தனித்து முழுப்பொறுப்பையும் சுமத்தக்கூடாது தேவையான நடவடிக்கை எடுக்கக் கூடிய அதிகாரம் கொண்ட மூன்று சிரேஷ்ட அதிகாரிகள் வடக்கு - கிழக்கு யுத்தப் பிரதேசத்தில் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் இதில் பங்கு உண்டு'' இவ்வாறு இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னா தனது பதவி ஒய்வு குறித்து ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிற்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இக்கடிதம் டி. பி விஜேதுங்கவிடம் கடந்த மூன்றாம் திகதி கையளிக்கப்பட்டது. இக்கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் ஒய்வு குறித்து முடிவு எதுவும் இதுவரை ஜனாதிபதியால் அறிவிக்கப்படவில்லை, எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் சிசில் வைத்தியரெட்னா பதவியிலிருந்து ஒய்வு பெறுவார் எனவும் டிசெம்பர் 31ஆம் திகதி வரை

### ராணுவதளபதி சிசில்

மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா தற்காலிக இராணுவத் தளபதியாக நியமிக்கப்படலாம் எனவும் பின்னர் அவர் இராணுவத் தளபதியாக நியமிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பூநகரி தாக்குதல் சமயத்தில் வட பகுதி இராணுவத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் றொகான் தலுவத்த, யாழ்- (10ஆம் பக்கம்பார்க்க)

## பாதுகாப்பு வலயத்தினுள் இரவு நேர ஷெல் தாக்கு

### ஆஸ்பத்திரி பகுதியில் வீழ்ந்து வெடித்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயத்தினுள் சிறிலங்கா இராணுவத்தினரால் நேற்று நள்ளிரவு எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

மண்டை தீவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து நடாத்தப்பட்ட இத் தாக்குதலின்போது பல எறிகணைகள் யாழ் நகரத்தின பல்வேறுபகுதிகளில் வீழ்ந்துவெடித்தன

யாழ் போதனா மருத்துவ (10 ஆம் பக்கம் பார்க்க)

## மத்திய மாகாண ஆட்சி; எதிர்க்கட்சி பிடிக்க முயற்சி

(கொழும்பு)

மத்திய மாகாணசபை முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லாபிரேரணை ஒன்று கொண்டுவரப்பட உள்ளதை அடுத்து மாகாணசபையில் ஐக்கிய தேசியக் கட்சியின ஆட்சி கலைக்கப்பட்டு. எதிர்க்கட்சியினரின் ஆட்சி ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந் நம்பிக்கையில்லா பிரேரணைசகு ஆதரவாக தொழிலாளர் காங்கிரஸ் வக்களிக்கும் பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாணசபை பதவிவிலக வேண்டி வரும் என்றும் எதிர்க் கட்சியின் கூட்டணி மாகாணசபையைக் கைப்பற்றி முதலமைச்சராக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தலைவர் காமினி திசநாயக்க பதவி (10ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்தவர் மரணம்

(குருநகர்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான பொம்பர் தாக்குதலில் குருநகர் சின்னக்கடைப்பகுதியில் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த றெக்கிளமேஷன் - மத்திய மேற்கு வீதியைச் சேர்ந்த அன்ரனி ராணி (வயது 35) என்பவர் நேற்றுமுன் தினம் மரணமானார். (21)

## பயணிகள் வவுனியா செல்ல ராணுவம் அனுமதி மறுப்பு

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனைச் சாவடியைத் தாண்டிச் செல்ல முயற்சித்த 150 பயணிகளை சிறிலங்கா இராணுவத்தினர் திருப்பி அனுப்பியுள்ளனர்.

நேற்று மேற்படி சோதனைச் சாவடியூடாக நூற்றுக் கணக்கான பயணிகள் வவுனியா நகருக்குள் நுழைந்தனர் இவர்களில் மேற்படி 150 பேரையும் சோதனையிட்ட படையினர் அவர்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

## பரீட்சை நடைபெறும்போது விமானக் குண்டுவீச்சு

(கிளிநொச்சி)

பரீட்சைகள் நடைபெறும் போது சிறிலங்கா விமானங்கள் குண்டு வீசுவதைக் கண்டித்து கிளிநொச்சிக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அரசுக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 6-ம் திகதி க. பொ. த. சாதாரணப் பரீட்சை

### கண்டித்து மகஜர்

தொடங்கியபோது சிறிலங்கா விமானப் படை விமானங்கள் இரண்டு குண்டு வீசியதைக் கண்டித்து சிறிலங்கா அரசுக்கு மாணவர்கள ஆசிரியர்கள, கல்விமான்கள். பெற்றோர் ஆகியோர் இணைந்து (10ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வெற்றுப்போத்தல்கள் தேவை

வெற்றுப் போன்விட்டா, மாமைட், வீ வா, ஹர்லிக்ஸ் போத்தல்கள் மூடியுடனும் ஜாம். புறோடினேக்ஸ், பியர், கோடியல் போத்தல்கள் மூடியில்லாமலும் எம்மால் கொள்வனவுசெய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (சி8054)

### ஜோதிட விஞ்ஞானம்

14-4-94 வரை ஒக்டோபர்| நவெம்பர் முதல் வியாழ, சனி மாற்ற பலாபலன்கள் ரூ 10|- எங்கும் விற்பனையாகின்றன பகவான் மருந்தகம் 221. நாவலர் வீதி யாழ்ப்பாணம் நூலாசிரியர் PROF. சத்தியதாஸன் (6831)

### மகா தேவா ஜோதிடம்

வருஷப் பலன் வெளிவந்துவிட்டது ஜோதிடரை தினசரி 140, செல்லர் வீதி, நல்லூரில் சந்திக்கலாம். (6814)

### தவறிவிட்டது

பளை தம்பாபிள்ளை கிருஷ்ணநாதன் என்பவருடைய கடவுச்சீட்டு (பாஸ்போட்) பூநகரி நல்லூரில் பயணச்சீட்டு பெறுமிடத்தில் தவறி விட்டது, கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6827)

### புதுவை

முடியும் என்று நான் அடிக்கடி நினைக்கிறதுண்டு எல்லாவற்றிலும் பார்க்க முக்கியம் அவரது Narrative Style அவர் சொல்லுகிற அந்த உரை அந்த நடை உரையாடுவதுபோன்ற தன்மை ஊடாக கவிஞனுடைய ஆளுமை எங்களோடு நேரே நிற்கிறது. எங்களுடைய கற்பனைகளையும் நம்பித்தான் புதுவை இரத்தினதுரை கவிதைகளை எழுதியுள்ளார். அவர் எழுதுகிற முறையில் எங்களுடைய கற்பனையும் தொழிற்படும். அந்த Narrative Style அந்தச் சொல்லுகிறமுறைமைஇருக்கிறது. அந்த Narrativeக்குள்தான்கவிதைகளுடையதொடர்பு Communication ஏற்படுகிறது இந்தக் கவிஞனுக்கும் எங்களுக்குமிடையிலே ஒரு நேரடியாக தொடர்பு வருகிறது. இது பாடல்களோடு சேருகிற பொழுது, Lyricகோடு சேருகிற பொழுது Music கோடு சேருகிற பொழுது அதற்கொரு அபரிதமான, அபாரமான வன்மை வந்து விடும். இதனாலே தான் புதுவையினுடைய Lyrical Poetry புதுவையினு Musical Poetry மிக முக்கியமானவையாக மாறியிருக்கிறது. ஏனென்று சொன்னால் அந்தப் பாட்டில் இருக்கிற கற்பனை ''வெள்ளி நிலா விளக்கேற்றும் நேரம்'' என்ற பாடலின் கற்பனை, அந்த இசை தருகிற கற்பனை இது எல்லாம் சேருகிற பொழுது தான் ஒரு முழுமையாக கவிஞனை நாங்கள் காணலாம்.

உண்மையில் புதுவை இரத்தினதுரையால் நாங்கள் பெருமைப்படுகிறோம். மற்ற எந்த இலக்கிய வடிவத்துக்கும் இல்லாத ஒரு ஆற்றல் ஒரு உள்ளார்ந்த ஆத்ம தரிசனத்தை, ஒரு Inner Vision னைகவிதை தருகிறது.

புதுவையினுடைய கவிதையை நாங்கள் இன்றைக்கு இவ்வளவு புகழுகிறோமே என்றால் அதற்குக் காரணம் அவற்றை நாங்கள் வாய்விட்டுப் படிக்கப் படிக்க உள்ளுக்குள்ள ஏதோ ஒன்று விரிந்துகொண்டே போகும். இந்த Inrer Vision பெருகிக் கொண்டே போகும்.

## பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் பாஸ்கரன் பிரசாந்

கூவில், புலோலி

அசோக் வீதியைச் சேர்ந்த பாஸ்கரன் காஞ்சனா தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரசாந் தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில வெகு சிறப்பாக கொண்டாடினார். இவரை அப்பா (ஜேர்மனி), அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், மச்சானமார், மச்சாளமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் முருகன் அருள்பெற்று பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தியுள்ளனர். (6815)




## 1- ம் ஆண்டு நினைவு



உதயம்
29. 10. 1905

அஸ்தமனம்
10. 12. 1992

திதி
30. 11. 1993

### அமரர் த. ச. துரையப்பா -C. C. S

இளைப்பாறிய O. A. யாழ் கச்சேரி

அன்பும் பண்பும் பாசமுமுள்ள அப்பாவே! எம்மத்தியில் பிறந்து, எமக்கும் மக்களுக்கும் வழிகாட்ட இறைவனைவேண்டுகின்றோம்.

'கேதீஸ்வரம்' ஆனைக்கோட்டை

மனைவி, பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(6799)

## பட்டப்படிப்புகள் கல்லூரி
### புதிய மாணவர்களை அனுமதித்தல்
### கல்வியாண்டு 1994/95

பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களின் வெளிநிலைப் பட்டப் பாடநெறிகளான,

- கலைமாணி B. A.
- விஞ்ஞானமாணி B. Sc. (புள்ளிவிபரவியல்)
- வணிகமாணி B. Com.

க. பொ. த. உயர்தரம் 3பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

1993 ஆகஸ்ட் பரீட்சைகளுக்குத் தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விரிவுரைகள் 11-12-1993இல் ஆரம்பமாகின்றன.**

விபரங்களுக்கு:

உதவிப் பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஃ வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும் நிறுவனம் யாழ் நகரில் இதுவே.

(சி-8068)

## BECON
### யாழ்ப்பாணம்
### A/L 94 DAY CLASSES

கலை, வர்த்தகம்
புதிய பிரிவு

பொருளியல்:- S. வரதராஜன்
வர்த்தகம்:- பசில்
கணக்கியல்:- சௌந்தி

**ஆரம்பம் 14-12-93 செவ் 8.00 A M**

- நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
- முன்கூட்டியேஅனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்

(சி-8089)

## நினைவு கூருகின்றோம்...
### 1993-12-10

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் பூநகரி சங்குப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

**விக்ரர்-சுமித்திரன்** (விக்ரர் டலீமா-பேசாலை - மன்னார்)

1985ஆம் ஆண்டு கிளிநொச்சி, கரடிப்போக்குப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**புள்ளி-ஜெயராம்** (கந்தசாமி மோகனகாந்தன்-32, சுண்டுக்குளி-யாழ்)

1988ஆம் ஆண்டு திருநெல்வேலியில்இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளின் சுற்றிவளைப்பின் போது தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய-

யாழ் மாவட்டத் தளபதி,

**லெப்-கேணல் மதி** (சுப்பிரமணியம் பாலச்சந்திரன் - செல்வபவனம், மல்லாகம், தெல்லிப்பழை கிழக்கு - யாழ்)

திருமலை மாவட்ட, மட்டப்புக்கழிப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1989ஆம் ஆண்டு மன்னார்- தலைமன்னார்ப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட பெண்குழந்தை.

1990ஆம் ஆண்டு அம்பாறை-பக்கியெல்லக் கிராமத்திலிருந்து புறப்பட்ட சிறிலங்கா ஊர்க்காவல் படையினரால் மட்டு - பாலைவெட்டைப் பகுதியில் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்ட பக்கியெல்லை 35-ம் கிராமத்தைச் சேர்ந்த 2 தமிழிளைஞர்.

1992ஆம் ஆண்டு மட்டு - மணற்பிட்டி, செம்பூர்ப்பகுதியில் இயகக வேலையாகச் சென்றுகொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவம்பதுங்கியிருந்துமேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய.

**மேஜர் வித்தியாதரன்-டேவிட்** (இரத்தினசிங்கம் அரசரத்தினம்- அம்பிலாந்துறை-மட்டு)

சாவகச்சேரி-மட்டுவில் தெற்கு, நுணாவில் மேற்கு பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட சுப்பர் சொனிக் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 பொதுமக்கள்,

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8085)

யாழ்ப்பாணம்

# வை. கோவின் தலைவர் பிரபாகரன்: இப்படிக் கூறினாராம் கருணாநிதி

அண்ணா நகரில் ஐயப்பன் கோவில் அருகே உள்ள எளிமையான வை. கோ. வின் வீடு, தொண்டர்களாலும் மாவட்டங்களிலிருந்து வந்த பல்வேறு பிரிவு தலைவர்களாலும் இளைஞர்களாக நிரம்பி வழிகிறது! அண்ணா காலத்து முதியவர்கள், அந்த இளைஞர்களுடன் உற்சாகமாகப் பேசி... ஒரே கலகலப்பான காட்சி!

பெரிய அளவில் கலைஞர் படம்-பிரபாகரனுடன் வை. கோ. காட்சி தரும் ·படம்- வை. கோ. கலைஞர், பேராசிரியர் அமர்ந்து வேட்பாளர்களைத் தேர்வுசெய்யும் படம் வரவேற்பறையில் பளிச்சிடுகிறது!

தொண்டர்கள் தன்னிச்சையாக அந்த வீட்டில் எங்கு வேண்டுமானாலும்நுழைந்து திரிய... தலை மூழ்கி விட்டுத் துண்டால் தலையைத் துவட்டியவாறு வை. கோ நம் எதிரில் பிரசன்னமாகிறார். 'பந்தா' முற்றிலும் இல்லை!

கொத்தாக மாலைப் பேப்பர்களை எடுத்துக் கொண்டு, நம்மையும் அழைத்துக் கொண்டு சிறப்புப் பேட்டி தர, தன்னறைக்கு அழைத்துச் செல்கிறார்.

தி. மு க அரசு பதவிக்கு வந்த பிறகு- எனக்கும் தலைவரிற்கும் இடைவெளி உருவானது 'தலைவர் என்னை வெறுக்கிறார் ஒதுக்குகிறார்'

என்று புரியத்தொடங்கியது 'சரி காலப்போக்கில் இது சரியாகி விடும் ... யாரோ தவறாகச் சொல்லித்தான் தலைவர் இப்படி நடக்கிறார் ...' என்று என்னைத் தேற்றிக் கொண்டேன். வேற்றுமையை வளர விடாமல் தடுப்பதற்கான எல்லா வழிகளையும் கடைப்பிடித்தேன் ... ஏமாந்தேன்...

என் மனதைக் கொடுமையாக வேதனைப்படுத்திக் கிழித்த கட்டங்கள் உண்டு. நான் யாழ்ப்பாணம் சென்று திரும்பினேன். நானும் பிரபாகரனும் தோள்மேல் கை போட்டு நிற்கும் புகைப்படம் ஜீ. வி யில் வெளியானது அதை உங்களிற்கு தந்தது யாரெண்டு தெரியாது! ஆனால் கலைஞரிடம் அது பெரிய விளைவைஉண்டாக்கி விட்டது நெல்லைமாவட்டச் செயலாளர் லட்சுமணன் போன்றவர்களை வைத்துக் கொண்டு, என்னய்யா இவன் பிரபாகரனுடன் நின்றுபோஸ் தர்றான். அவனுக்கு தலைவன் நான் இல்லேய்யா. பிரபாகரன் தான் அவனுக்குத் நாட்டிலேயே தி. மு. க.விற்கு மிகப் பலவீனமான சிவகாசித் தொகுதியை எனக்கு ஒதுக்கித் தந்தார் கலைஞர் தலைவரைச் சந்தித்தேன். அங்கே நிற்பதில் பலனில்லை. ரொம்ப வீக்கான தொகுதி என்றுசொல்லிப் பார்த்தேன். அவரோ பரவாயில்லைபார்த்துக்கலாம் நில்லுங்க என்று சொல்லி விட்டார். தேர்தலில் தி. மு. க. எல்லா இடங்களிலும் தோற்றது. கூட்டணிக் கட்சியான கம்யூனிஸட் மட்டும் நாகபட்டினத்தில் ஜெயித்தது. அப்போதும் தி மு. க. வில் அதிக வோட்டுக்கள் பெற்ற தொகுதி சிவகாசிதான்.

கேள்வி; தி. மு. கவில் உங்கள் மேல் வெறுப்பு வளரக் காரணமாக யாரைச் சொல்வீர்கள்?

பதில்; ராஜ்ய சபா எம். பி. என்ற முறையில் எனக்கு ஐக்கிய நாட்டுச் சபையில் இந்தியா சார்பில் போய்ப் பேச வேண்டும் என்று நெடுநாள் ஆசை. அப்போது வி பி. சிங் அரசாங்கத்தில், முரசொலிமாறன் ஒரு மந்திரி! அவரிடம் என் ஆசையைச் சொன்னேன்.

'இல்லையே நமக்கு ராஜ்ய சபையில் 'ஸ்ட்ரென்த்' கிடைதோளைப் பற்றியிழுத்து, தனியே அழைத்துச் சென்றார். 'நீங்கள் சொல்கிற மாதிரி எதுவுமே நடக்கவில்லை கிருஷ்ணன் பெயரைச் சிபார்சு செய்ததே உங்கள் கட்சிதான்' என்று நிதானமாகச் சொன்னார். எனக்கு 'ச்சீ' என்று ஆகிவிட்டது!

பிறகு இது பற்றிப் பேச்சு வந்த போது 'அவனுக்குத் தான் ராஜ்யசபா பதவி கொடுத்திருக்கே கொடுத்ததை வாங்கிக் கொண்டு போக வேண்டியது தானே'' என்று கட்சித் தலைவர் சொன்னதாக எனக்குத் தகவல் வந்தது கொடுத்ததை வாங்கிக் கொண்டு போ! என்று சொல்கிற பாசிச அணுகுமுறை எஜமான மனோபாவம் என்றைக்குமே உருப்படாது! அதன் விளைவுகளைத்தான் இன்று கலைஞர் அனுபவிக்கிறார் பாருங்கள் ''What a great Leader... What a Mighty fall''

கேள்வி; குற்றம் சுமத்தப் பட்ட நிலையே தொண்டர்கள் உங்கள் பக்கம் சேருவதற்குப் போதுமானதா? தி மு. க. வில் நடக்கும் வாரிசு அரசியலை விரும்பாதவர்கள் தான் உங்கள் பின்னால் வருகிறார்களா? எப்படி இதை ஸ்டாலின் படத்தை மட்டும் பெரிதாகப் போடுவது என்று ஸ்டாலினின் வளர்ச்சிப் பணியையே கவனித்தார்கள். எல்லாமாக சேர்த்துத்தான் என் பக்கம் உள்ள நியாயத்தை உணர்த்தியிருக்கிறது. என் பின்னால் ஆதரவு திரண்டு நிற்கிறது.

கேள்வி: பகைநாட்டுத் தலைவர்கள் கூட இப்போது சந்தித்து சமாதானம் பேசுகிறார்கள். நீங்கள் மட்டும் ஏன் கலைஞரை நேரில் சந்தித்துப் பேசமறுத்தீர்கள்? கலைஞரின் கவர்ச்சிக்கும் அவர் மீது நீங்கள் வைத்திருக்கும் மதிப்புக்கும் முன்னால் உங்கள் உறுதி உடைந்து போய்விடும், தாக்குப்பிடிக்க முடியாது என்று பயமா அல்லது தனித்து இயங்க ஏற்கனவே முடிவு செய்துவிட்டீர்களா?

பதில்; நிட்சயம் இரண்டுமே கிடையாது. ''கொலைகாரன்'' என்ற கொடும் பழியை என்மேல் சுமத்தி என்னை ஒழிக்கத் திட்டமிட்டதை என்னால் சகிக்க முடியவில்லை. ஒரு திவளை அந்த பழியைத் தொண்டர்கள் நம்பியிருந்தால் என் கதி என்னவாயிருக்கும்! எனது அரசியல் வாழ்வு முடிந்து போவது பற்

## கோபாலசாமி அளித்த பரபரப்பான பேட்டி

கோவையில் பத்திரிகை நிருபர்களுக்குக் கலைஞர் அளித்த பேட்டியை வை கோ. ஒரு வரி கூட விடாமல் படித்த பிறகு, சிரித்தவாறு நம் பக்கம் திரும்ப... பேட்டி ஆரம்பமாகிறது.

கேள்வி ''பல கால கட்டங்களில் உங்களை அவமானப்படுத்திய நிகழ்ச்சிகள் தி. மு. கவில் நடந்துள்ளன. அப்படியும் கூட: தேவைக்கும் அதிகமாகவேஅடக்க உணர்ச்சியுடன் இருந்தீர்கள். கலைஞர் எதிரில் எப்போதும் கைகட்டித்தான் நிற்பீர்கள்... அதெல்லாம் எதற்கு...? அளவுக்கு மிஞ்சிய- பிறகு 'கார்னர்' செய்யப்பட்ட பிறகு எதிர்க்கிறீர்கள்...? முன்பே ஆட்சேபனைக் குரல் எழுப்பியிருக்கலாமே...?''

பதில்: அவசியம் பார்த்து அப்படிச் செய்தவனல்ல நான்... தலைவர் மீது பற்று, பாசம் என்பதை விட பக்தியே வைத்திருந்தேன் நான். மாணவனாக இருந்த பருவத்திலேயே கலைஞரை தூரத்தில் நின்று பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தவன்... பிறகு, நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்த போது அந்த பிரமிப்பையும் பக்தியையும் வளர்த்துக் கொண்டேன். மற்றவர்களுக்கு மரியாதை தரவேண்டும் என்பது இயற்கையாகவே என்னுள் எழுந்த பண்பு.

பொதுவாகவே, மனிதனுக்கு அதெல்லாம் அவசியம் என்று நினைப்பவன் நான். கலைஞருடன் பேசிக்கொண்டிருந்த போது அனேகமாக நான், அவர் எதிரில் உட்கார மாட்டேன். அவர் மிகவும் வற்புறுத்தினால் மட்டுமே தயக்கத்துடன் அமருவேன். ஆனால், 1989 ஆம் வருட ஆரம்பத்திலிருந்து. தலைவன் என்று வெறுப்பை உமிழ்ந்திருக்கிறார் கலைஞர் அதைக் கேள்விப்பட்ட பிறகு இரவு முழுவதும் நான் உறங்கவில்லை.

என்மனைவிகூட 'என்னங்க இது தலைவர் இப்படிச்சொல்லிவிட்டாராமே' என்று வேதனையில்கதறிஅழுதுவிட்டாள். நானும் அழுதேன். அடுத்த நாளே அவரைச் சந்தித்து, 'தமிழர்களிற்ாக விடுதலைப் புலிகள் நடத்துகிற போராட்டம் உன்னதமானது. அவர் மேல்எனக்குமதிப்பு இருக்கிறது. ஆனால்என் தலைவர்நீங்கள்தான்என்று சொல்லிகண்ணீர் வடித்தேன். அன்று அவருடன்தான் நான் சாப்பிட்டேன். ஓரளவு என் மனதுக்கு ஆறுதல் கிடைத்தது ஆனால் நான் கதறி அழுது மன்றாடியதெல்லாம் அவருக்குள்சிறு மாற்றத்தையும் உண்டாக்கவில்லைஎன்றுபிறகுஉணரமுடிந்தபோதுஇடிந்து போனேன்!

டெல்லி ராஜ்ய சபாவில் தி. மு. க. வின் புகழ் நிலைக்கும்படி, வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் வாதங்களை எடுத்து வைப்பேன் எனக்கு எந்தப்பாராட்டு வந்தாலும், 'அதற்குக் காரணம் எனது இயக்கம் எனது தலைவர்' என்று டெல்லித் தலைவர்களிடம் சொல்வேன்! கலைஞரை எந்த அளவுக்கு உயர்ந்த இடத்தில் வைக்க முடியுமோ அந்த அளவிற்கு வாதங்களை பயன்படுத்துவேன் அ தி. மு க. உறுப்பினர்கள் எட்டுப் பேரும் சேர்ந்து கலைஞரைப் பற்றி அவதூறாகப் பேசும் போது, நான் ஒருவனாக நின்று சீறுவேன். மேற்கொண்டு சபையில் அவர்கள் பேசாதபடி செய்வேன்.

இப்படியிருக்க 1989ஆம் வருடம் நாடாளுமன்றத் தேர்தல் வந்த போது, தமிழ் யாதே நம் கட்சி சார்பில் யாரையும் அவர்கள் அனுப்புவது சந்தேகம் தான் என்று சொல்லிவிட்டார் மாறன். நான் திரும்பி விட்டேன் திடீரென டில்லியிலிருந்து ஒரு அரசியல் நண்பர் எனக்கு போன் செய்தார்.

கோபாலசாமி! - ஐக்கிய நாடுகள் செல்வதற்கான குழுவின் பட்டியல் தயாராகிறது. தி. மு. கவிலும் ஒருவரை அனுப்பக் கேட்கிறார்கள். கிருஷ்ணன் எம்பியின் பெயரை உன் கட்சி கொடுத்திருக்கிறது. நீ உடனே முயற்சி செய்தால், உனக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கும் என்றார். நான் மாறனிடம் ஓடினேன் விசயத்தைச் சொல்லி வாயைக்கூட மூடவில்லை.

கடுவென்று முகத்தைவைத்துக் கொண்டு, 'நான் அப்பவே சொல்லிவிட்டேன் ஆனா மத்திய அரசு, உங்க பெயரை ஏற்கவில்லை நீங்க விடுதலைப்புலி ஆதரவாளர் என்று சொல்லி வெளியுறவுத்துறை இதற்கு அனுமதி தரமறுத்து விடடது என்றார். நான் இடிந்து போனேன்.

'பரவாயில்லைநீங்கள்எனக்காக சிபார்சு செய்தீர்கள் அல்லவா அதுபோதுப' என்று சொல்லிவிட்டுத் திரும்பி விட்டேன். பிறகு டெல்லிக்குச் சென்றபோது, வெளியுறவுத்துறை அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் எதிர்ப்பட்டார். 'மிஸ்டர் குஜ்ரால்! உங்களிற்கு நான் என்ன கெடுதல்செய்தேன்;' என்று சொல்லிகோபமாக விபரம் கேட்டேன். சுற்றிலும் பலர் இருந்ததால், பதில் பேசாமல் போய் விட்டார், குஜ்ரால் அன்றிரவுஒருவிருந்துக்கு குஜ்ரால் வந்திருந்தார். என் எடை போடுகிறீர்கள்?

பதில்; கோபால்சாமியை வைத்துக் கூட்டம் போட்டால் கட்சியில் தடுக்கிறார்கள். கலைஞர் மகன் என்பதால் ஸ்டாலினுக்கு மட்டும் நல்ல 'பூஸ்ட்' தருகிறார்கள். வேண்டுமென்றே கோபாலசாமியை வெறுத்து ஒதுக்குகிறார்கள் என்று தொண்டர்களுக்கு நன்றாகவே புரிந்து விட்டது. தொண்டர்கள் என் பக்கம் திரளுவதற்கு இது ஒருகாரணம். நான் போராட்டங்களில் கலந்துகொண்டு ஜெயிலுக்குப் போனாலும் தனிஅறையோ, கட்டிலோ கேட்பது கிடையாது. தொண்டர்களுடன் ஒன்றாக சேர்ந்தே இருப்பேன் படுப்பேன்! சாப்பாட்டில் பேதம் வந்துவிடக் கூடாது என்பதற்காக, ரேஷன் முறையில் சமையல் பண்டங்களை வாங்கி மொத்தமாக சமைத்த பின்புதான் ஜெயிலில் சாப்பிடுவேன்! அந்த வகையில் தொண்டர்கள ஆதரவு எப்போதும் எனக்கு உண்டு.

திருச்சி மாநாட்டில் கலைஞர், ஸ்டாலின், மாறன் மூவருக்கும் ராட்சத கட்-அவுட் வைக்கப்பட்டது பேராசிரியரிற்கும் வைக்கப்பட்டது நாஞ்சிலாருக்கும் சாதிக்பாட்சாவுக்கும் 'லில்லிபுட்' சைஸில் வைத்தார்கள்

''பாரய்யா தலைவர் தன் குடும்பத்துக் காரங்களிற்குத் தான் பெரிய கட் அவுட் வைக்கிறார் அவர் குடும்பத்தில் இன்னும்கொஞ்சம்பேர்தானே இருக்காங்க அவங்களிற்கும் வைச்சுட்டா சரியாய் போயிடுமே'' என்று வெறுப்புடன் கிண்டலடித்தவர்களை எனக்குத் தெரியும். மாநாடுகளில் ஸ்ராலினுக்குத்தனிமரியாதை அவரதுஇளைஞர்அணிநிகழ்ச்சிகளுக்குத்தனியாக ஒரு நாள் ஒதுக்குவது விளம்பரங்களில் றிக்கூட நான் கவலைப்படவில்லை. வேறு பல பயங்கர விளைவுகள் அல்லவா வெடித்திருக்கும். தொண்டர்கள் எல்லாம் சேர்ந்து என்னைஅடித்து விரட்ட வேண்டும் என்ற வஞ்சக எண்ணமதானே கலைஞரிற்கு! அந்தப் பழியை எத்தனை தலைமுறைகளுக்கு என் குடும்பத்தை உலுக்கியிருக்கும்! இந்த இயக்கத்துக்கு வந்ததற்காகப் பெருமை சுமக்காவிட்டால் பரவாயில்லை. இப்படி ஒரு பழியை சுமக்கவா வந்தேன்...? என் குடும்பத்தால் இதைத் தாங்கவே முடியவில்லை அத்தனை பேருமே துடித்துப் போய்விட்டார்கள் விடுதியில் தங்கிச் கல்லூரியில் படிக்கும் என்மகள், கலைஞரின் குற்றச்சாட்டைப் படித்து விட்டுத் துடித்துக் கதறி அழுதிருக்கிறாள்.

பரிவு, பச்சாதாபம், பண்பு என்பதெல்லாம் துளியும் இல்லாமல், என்மீது கொலைப் பழி சுமத்த எத்தனை கொடுமையான இதயம் அவருக்கு இருந்திருக்க வேண்டும். அதன் பிறகு எப்படி நான் அவர்முகத்தைப் பார்க்க முடியும்? நான் அடிப்படையில் அடக்கம் மிகுந்தவன் ஆனால் அநியாயங்கள் எழுகிற போதெல்லாம் பொங்கியெழுகிற ஒரு ரெபல் , புரட்சிக்காரன் கலைஞரின் வெளிவேசங்கள் கலைந்து நிஜரூபத்தைப் பார்க்கும்போது என ரத்தம் கொதிக்கிறது. அதன் விளைவுகள் சாதாரணமாக இருக்காது.

கலைஞர் வாயிலிருந்து அந்த வார்த்தைகள் வந்தவுடனேயே நான் உயிரற்ற சவமாகிப் போனேன் அடுத்து வந்த நான்கு நாட்களில், என் வாழ்க்கையே முடிந்து போனது என்று தான்நினைத்தேன். தொண்டன் தண்ட

(8ஆம் பக்கம் பார்க்க)

# “கியூபெக் ஒரு மக்கள் கூட்டத்தின் தேசியம் அது விரைவில் ஒரு தேசமாகி விடும்”

## பாலகுமாரன்

அண்மைக் காலமாக கனடாவில் தொடர்ந்து நிகழ்ந்துவரும் அரசியல் மாற்றங்கள் தமிழீழ மக்களால் அவதானிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டியவையாகின்றன. உலகிலே மாந்தர் வாழ்வதற்கு சிறந்த இடமாக கனடாவை ஐ. நா. பரிந்துரைக்கின்றது; உலகிலே கூடிய கல்வியறிவு ... செல்வ வளம், நீண்ட ஆயுள்; மிகக்குறைந்த குழப்பங்கள்—அரசியல் வன்முறைகள் கொண்ட நாடாக கனடா திகழ்வதே இதற்குக் காரணம். ஆனால்இத்தகைய கனடாவின்எதிர்காலம்இன்று பெருத்த கேள்விக்குறியாகி விட்டது. இச் செய்தி இன்று உலகிலே பலரிற்கு விளங்காத புதிராக உள்ளது. ஆனால் பல்லாயிரக் கணக்கான மைல் தளளியிருந்த போதும் கனடாவின் கியூபெக் மாநில மக்களின் மனக்குறையை, தாங்கள் புறக்கணிக்கப் படுகின்றோம் என்கிற அவர்களது உணர்வை எமது மக்களாலேயே புரிந்து கொள்ள முடியும். ஏனென்றால் இனப் பிரச்சனைக்கு கூட்டாட்சி (சமஷ்டி) முறை மிகப் பொருத்தமானது என அரசியல் யாப்பு வல்லுநர்கள் அடித்துக் கூறிவரும் இன்றைய நாட்களில் கியூபெக் மாநில மக்களின் மனநிலையோ வேறுபட்டதாக இருக்கின்றது. கூட்டாட்சி முறையில் கூடிய அதிகாரங்களை வழங்கும் ஓர் உடன்பாட்டை இம் மக்கள் சென்ற ஆண்டு நிராகரித்தபோது கொழும்பில் குடியிருக்கும் தமிழ் அரசியல் யாப்பு நிபுணர் ஒருவர் அதனை ,‘குரூரமான மறுதலிப்பு எனக் குறைபட்டுக் கூறிக் கொண்டார். ஏனென்றால் தமிழீழ தேசியச் சிக்கலிற்கு கூட்டாட்சி தீர்வைத்தன்னும் வழங்க தயாரில்லாத நிலையில் அதுபற்றி நினைப்பதையே பாவம் என்று கருதும் சிங்கள ஆளும் வர்க்கம் என்னும்போது கூட்டாட்சி முறை என்பது தொடர்ந்தும் தம்மை அடிமைத்தளையில் பிணைத்து வைக்கும் சங்கிலி என கியூபெக் மக்கள் கருதுவதே இங்கு கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய செய்தியாகும்.

இதே அடிப்படையில்தான் சென்ற மாதம் கனடாவில் நடைபெற்ற பொதுத்தேர்தல் முடிவுகள் அமைந்து விட்டன. உலகை பெரும் வியப்பில் தள்ளிய முடிவுகள் இத் தேர்தல் முடிவுகள். ஏனென்றால் மிக நீண்டகாலமாக கனடாவை ஆட்சி செய்த பழமை பேண்கட்சி தூக்கி வீசப்பட்டது. இதனால் கனடாவின் முதல் பெண் பிரதமர் என்கிற பெருமையை பெற்ற கிம்கம்பெல் அம்மையாரால் சில காலமே பதவி வகிக்க முடிந்தது. நாடாளுமன்றத்தின் கீழ்ச் சபையின் 295 இடங்களில் 175 இடங்களை லிபரல் கட்சி எனப்படும் தாராண்மைவாதக் கட்சி பெற்றது. புதிதாக தெரிவு செய்யப்பட்ட இக் கட்சியும் அதன் தலைவர் ஜீன் செரிரியனும் Jean Chretien) கனடாவை அமெரிக்க செல்வாக்கிற் தள்அமிழ்வதை எதிர்ப்பவர்கள் என்பது இங்கு குறிப்பிட வேண்டிய விடயம். இவ் வியப்பைவிட பெரிதான வியப்பை கியூபெக் மாநில மக்கள் ஏற்படுத்தினர். வழமையான கட்சிகளை விடுத்து கியூபெக் கனடாவிலிருந்து பிரிந்து தனிநாடாக வேண்டும் எனக் கோரிய புளொக் கியூபெக் (Bloc Quebecois) கடசிக்கு பெருத்த ஆதரவினை அளித்தனர். இதனால் என்றுமில்லாத வகையில் 54 இடங்களைப் பெற்று இக் கட்சி கனடாவின் பிரதான எதிர்க்கட்சியாகி விட்டது. அதேவேளை கியூபெக் மாநில பிரெஞ்சுக் கனடிய மக்களின் விடிவிற்கு தடையாகவுள்ள ஆங்கில மொழி பேசும் மேற்குமாநிலப் பகுதி ஆங்கிலக் கனடியர் சீர்திருத்தக் கட்சி (Reform Party)க்கு தமது ஆதரவினை அளித்தனர் இக் கட்சி கியூபெக் மக்களின் தன்னாட்சி கோரிக்கைக்கு எதிரானது எனவே இன்று எதிரும் புதிருமான முரண்பட்ட கட்சிகளை கொண்டதாக அமையும் கனடாவின் நாடாளுமன்றம் பெரும் குழப்பங்களைக் கொண்டதாக அமையப் போவதாக அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. அது மட்டுமன்றி கனடாவின் எதிர்காலமே என்னவாகும் என்கிற வினாவை ‘‘இத் தேர்தல் முடிவு குறிப்பது கனடாவில் இரு தேசங்கள் இருப்பதையே ஆகும்’’ என புளொக் கியூபெக் கட்சித் தலைவர் லூசியன் புச்சாட் (Lucien Bouchard) வலியுறுத்திக் கூறியிருப்பது எழுப்பிவிட்டுள்ளது.

சிறிலங்காவில் உள்ள அரசியல்வாதிகளிலிருந்து அரசியல் சட்டவல்லுனர்கள் வரை பல்வேறு காரணங்கட்காக கனடாவில் நிகழும் அரசியல் திருப்பங்களை அவதானித்து வருகின்றனர் இங்கு நிலவும் தேசிய இனச் சிக்கலுக்கு ஏதேனும் தீர்வினை கனடாவிலிருந்து பெற முடியுமா எனத் தேடுவதும் இவர்கள் நோக்கங்களில் பிரதானமானதாகும் மேலும் இங்கும் அங்கும் சில புறத்தோற்ற ஒருமைப்பாடுகள் காணப்படுவதும் கவனிக்கத்தக்கது. இங்கு நிலவுவது போன்றே அங்கு இரு மொழிச் சிக்கலும் — பிரெஞ்சு மொழி பேசும் கனடிய மக்கள் தமது மொழி ஆங்கில மொழி பேசும் கனடியரால் அவமதிக்கப்படுவதாக கருதும் நிலையும் உண்டு. அங்கும் விளம்பரப் பலகையிலிருந்து, வர்த்தகப் பண்டங்கள் விபர ஒட்டிகள் வரை மொழி புறக்கணிப்பு உண்டு. மேலும் பிரிந்து செல்ல விரும்பும் கியூபெக் மாநிலத்திற்கு அதிகாரங்கள் வழங்குவது பற்றிய சிக்கல்கள் அதற்கான யாப்பு திருத்தங்கள் என பல ஒத்த சிக்கல்கள் உண்டு. இதைத் தவிர கனடாவிலே ஆகக் கூடிய தமிழீழ தமிழர் குடியேறியிருப்பதும் குறிப்பிட வேண்டியது.

1992ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26ஆம்திகதி இங்கு நடந்த நிகழ்ச்சியொன்று பல்வேறு நாடுகளிலிருந்து வந்த அகதிநிலை கோரிக்கையாளராக, குடியுரிமை, வதிவிடவுரிமை பெற்றோராக இருக்கும் இலட்சக்கணக்கான மக்களை பெரும் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டது. இவர்களை மட்டுமன்றி தேசிய இன சிக்கல்கட்கு கூட்டாட்சி அடிப்படையில் அதிகாரப் பங்கீடு, அதற்கேற்ப அரசியல் யாப்பு மாற்றங்கள், தனித் தன்மைகளை பாதுகாக்க சிறப்பு உத்தரவாதங்கள், கூடிய பிரதிநிதித்துவங்கள் என பல அரசியல் வாய்பாட்டு தீர்வுகள் அடங்கிய விரிவான தீர்வுத் திட்டமொன்றே மிகப் பொருத்தமானது என நம்புவோரையும் திகைப்பில் தள்ளி விட்டுவிட்டது அன்று தான் பொதுவாகவே ஏற்றுக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்பட்ட சர்லெட்ரவுண் உடன்பாடு (Chariottetown Agreement) எனப்படும் அரசியல் யாப்பு திருத்தத் திட்டமொன்று மக்களால் நிராகரிக்கப்பட்டது. 54 வீதமான கனடிய மக்கள் இத்திட்டத்தை எதிர்த்தனர். கியூபெக் பகுதி பிரெஞ்சுக் கனடியர்கட்கு அதிக அதிகாரங்கள் வழங்குவதை எதிர்க்கும் மேற்கு மாநிலங்கள் இதை எதிர்த்தது வியப்பில்லை. ஆனால் கியூபெக்கின் 55 வீதமான மக்கள் தமது அரசியல் அபிலாசைகளை இத்திட்டம் நிறைவேற்றவில்லையென எதிர்ப்பு வாக்கு அளித்தமையே இங்கு கவனிக்க வேண்டியது.

ஏனென்றால் இவ்வுடன்பாடு பலத்த விவாதங்களின் பின் பல அரசியல் கட்சிகள் ஆலோசனைகளைப் பெற்ற பின் முன்னைய திட்டங்களின் பல குறைபாடுகளை நீக்கும் வகையில் கியூபெக் மக்களின் தனித்துவத்தை அங்கீகரிக்கத் தக்க வகையில் வரையப்பட்டது. அது மட்டுமன்றி முன்னைய தீர்வுத் திட்டமாக வைக்கப்பட்ட மீச்லேக் உடன்பாட்டின் (Meech Lake Accord) பிரதான பல குறைபாடுகளும் நீக்கப்பட்டன. குறிப்பாக கனடாவின் உண்மையான சொந்தக் காரர்களான அதன் பூர்வீக குடிகளான செவ்விந்திய மக்கட்கு நிலவுடைமை அதிகாரம், கூடிய சுய ஆட்சி உரிமைகளை இப்புதிய திட்டம் வழங்கவிருந்தது. அது மட்டுமன்றி சர்லெட்ரவுண் உடன்பாடு கியூபெக் மக்களை தனித்துவம் வாய்ந்த சமூகமாக அதன் மொழி, பண்பாடு, சட்டவாக்கம் போன்றவற்றை அங்கீகரித்தது. அத்தோடன்றி கனடிய அரசாங்க அமைப்பையே மாற்றி கீழ்ச்சபையில் கியூபெக் மக்கட்கு 25வீத பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய,கியூபெக் மக்களை பாதிக்கும் சட்டங்களை அம்மக்கள் பிரதிநிதிகள் ஒப்புதலின்றி கொண்டுவரமுடியாமை கனடாவின் உயர் நீதி மன்றின் 9 நீதிபதிகளில் குறைந்தது மூவர் கியூபெக் மக்களாக இருத்தல என ஏற்பாடுகளைகொண்டிருந்தது. இவ்வாறாக இன்னும் பல உத்தரவாதங்கள் அரசியல் யாப்பில் சேர்க்கப்படவிருந்தன. ஆனால் என்ன செய்தும் எதைச் சேர்த்தும் என்ன பலன்?

கியூபெக் மக்களே இதை ஏற்கத் தயாரில்லை மறுதலிக்கப்பட்ட இவ் வாக்கெடுப்பின் கியூபெக் மக்களின் முக்கிய கட்சிகளில் ஒன்றான P Q எனப்படும் (Parti Quebecois) தலைவரான Jacgues Parizeau ‘‘கியூபெக் என்பது ஒரு மக்கள் கூடத்தின் தேசியம் அது விரைவில் அவர்களது தேசமாகி விடுமென்றார்’’ இதன் பின்னர் இப்போது இத்தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன.

கனடா என்று இப்போது அழைக்கப்படும் பூர்வீக செவ்விந்திய மக்களின் பகுதியில் குடியேறிய பிரஞ்சு மக்கள் 1867இல் ஆங்கிலேயரால் வெற்றி கொள்ளப்பட்டு ஒரு நாடாக்கப்பட்டு அவர்களின் கீழ் கொண்டுவரப்பட்ட பழைய அடிமை வரலாற்றை கியூபெக் மக்கள் எப்போதும் மறக்கத் தயாரில்லை. 1960 களில் அவர்களது விடுதலைக்கான உணர்வுகள் படிப்படியாக வெளிப்படத் தொடங்கின. கியூபெக் மாநிலத்தின் 82 வீதமான தங்களை13வீதத்திற்குக் குறைவான ஆங்கில மொழிபேசும் கனடியர் ஒடுக்குவதையும் தமது பொருளாதாரங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதையும் இவர்கள் எதிர்க்கலாயினர். தமது வறுமை நிலைக்கும் தமது மொழி கீழ்மைப் படுத்தப்படுவதற்கும் எதிராக இவர்கள் தமது குரலை1960 களில் எழுப்பினர். 1970களில் வழமையான அரசியல் முறைகட்கு மாறுபட்டதாக பொதுவுடமைக் கருத்துக்களை அடியொற்றி ஒரு புரட்சிகர விடுதலை இயக்கத்தை கட்டும் முயற்சியும் அங்கு நடந்தது. F L Q எனப்பட்ட கியூபெக்கிற்கான விடுதலை முன்னணி அங்கு தோற்றுவிக்கப்பட்டு சில காலமே செயற்பட்டதுபின்அவ்அமைப்புசெயலிழக்க 1970 களில் கியூபெக் மக்களின் தனித்துவத்தைப் பேணும் மிதவாதக்கட்சியாக Parti Quebecois எனப்படும் கட்சி உருவாகி செல்வாக்கு பெற்றது. இதன்தலைவரான Rene Levesque ரெனே ரெலவிஸ்கியூ பல காலம் கியூபெக் பகுதி முதலமைச்சராக செல்வாக்குடன் திகழ்ந்தார் என்றும் நீண்டகாலமாக உருப்படியாக இக்கட்சி எதுவும் செய்ய முடியாத நிலையில் இப்போது மீண்டும் தமது மனக்குமுறலை கியூபெக் மக்கள் தமது தேர்தலில் தீர்ப்பு மூலம் வெளிக்காட்டியுள்ளனர்.

எனினும் இராணுவ அடக்கு முறை என்ற வடிவம் அங்கு அரங்கேறும் சூழல் இல்லாமையால் விடுதலைப் போராட்டம் ஆயுதம்தாங்கிய வடிவத்தை எடுக்காமல் மிதவாத அரசியல் போக்கோடு நின்றுவிட்டது இதன் காரணமாகவே அரசியல் அகராதிப்படி மிதவாதிகள் என்றழைக்கப்படும் சட்டங்கள் பற்றி சிந்திக்கும் தமிழ்க்கழத் தலைவர்கள் சிலர் கனடா குறித்து அதிக ஆர்வம்காட்டி இப்போது மனமுடைந்து போயுள்ளனர். எது எப்படியிருந்த போதும் சர்லெட்ரவுண் உடன்பாடு நிராகரிக்கப்பட்டபோது ‘‘எமக்கு எது வேண்டாமென்பதையே இப்போது வெளிப்படுத்தினோம் இனிமேல் எது வேண்டும் என்பதை வெளிப்படுத்துவோம்’’ என கியூபெக் தலைவர் ஒருவர் குறிப்பிட்டார். அது இப்போது உண்மையாகிவிட்டது.

## தமிழ்த்தாயின் தலைமகன் நீ

நீ பிறந்த நேரம் தமிழன் துயில் கலைந்த காலம்
நீ வளர்த்த படைகள் பாய்ந்து பகை முடிக்கும் கோலம்
எதிரிப்படை ஓடுகிறது கண்டு உன்வீரம்
நாளை மலரப் போகிறது இங்கு தமிழ்ஈழம்

வேறு

கார்த்திகை மாதத்தில் நீ பிறந்தாய்
தமிழ் இனத்தின் விடிவிற்காய் நீ எழுந்தாய்
அன்னியப் படைகளுடன் நீ போர் தொடுத்தாய்
அரக்கர் கூட்டத்தை நீ திணற வைத்தாய்
மானமே பெரிதென நீ உணர்ந்தாய்
மண்மீட்கும் போரினிலே நீ குதித்தாய்
தமிழ்த் தாயின் தலைமகனாய் நீ உதித்தாய்
தமிழ்மகளின் நெஞ்சினிலே நீ நிலைத்தாய்
தமிழினத்தின் தலைமகனாய் நீ நிமிர்ந்தாய்
பிரபாகரன் என்றொரு பேர் எடுத்தாய்
தமிழின மக்களுக்கு நிழல்தரும் மரமானாய்
எதிரிக்கு நெருப்பாக தமிழ்மண்ணில் உருவானாய்
தமிழிற்கு காவலனாய் வரலாற்று நாயகனாய்
என்றென்றும் எம்முன்னே நிலையாய் வாழும் எம்
சேனைத் தலைவா! தமிழீழம் தனைமீட்டு
சுதந்திரத் தமிழீழமே மண்ணில் என்றென்றும்

வாழ்க! நீ வளர்க!!

- ஆ. கணேஸ்

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய
8-ம் ஆண்டு மாணவன்.
(விழிப்புலனிழந்தவர்) நவீல்ட் பாடசாலை,
கைதடி.

# தடயங்கள்

## சிறுகதை

### இளையவன்

ஒரு நொடி!

ஒரு கணம்!

ஒரு பேரிரைச்சல்!

ஒரு பெரும் முழக்கம்!

அவ்வளவும் தூசு மண்டலமாக மாறிப் போய்விட்டது. ஒரு கண் இமைக்கும் நேரப் பொழுதுக்குள் ஒரு கோரச் சம்பவம் கண்முன்னே நிகழ்ந்தேறி விட்டது. நூற்றியைம்பது ஆண்டு காலத்துக்கும் மேலாக அமைதியை தேடும் ஆத்மாக்களுக்கு அடைக்கலம் கொடுத்த ஆண்டவனின் இருப்பிடம் கற்குவியலாகமாறிப் போய் விட்டது.

எங்கும் ஒரே புகை மண்டலம்! தூசிப் படலம்!

குத்தெனப் பறந்து வந்த விமானம் மேலெழுந்து பறந்து சிறுபுள்ளியாகிச் சென்று மறைய கூக்குரல்கள் ஓலங்கள் மேலெழுந்தன. இயல்பான வேகத்தையும் மீறிக் கால்கள்... ஓடிச்சென்று சேர்ந்தானா? அல்லது பறந்துதான் போயிருப்பானா? குண்டுவீச்சு நடந்த இடத்திற்கு முதன்முதலாகச் சென்றுவிட்ட நிமலனின் கண்களுக்கு புகைமண்டலத்தைத் தவிர எதுவும் தென்படவில்லை. தூசு மண்டலத்தை விலக்கி பார்வையை ஊடுருவ விட்டான். கட்டிட இடிபாடுகள்- நெளிந்து வளைந்து போய்க் கிடந்த சைக்கிள்கள் - அறுந்து தொங்கிய சில வயர்கள்- அடிமேல் அடிவைத்து மெல்ல நகர்ந்தான்.

ஒரு மனித உருவம் நெடுஞ்சாண்கிடையாகக் கிடந்தது. அருகில் சென்றான், கையிலும் வயிற்றுப் பகுதியிலும் இருந்து இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது மூக்கின் அருகே தனது உள்ளங்கையைக் கொண்டு சென்றான். வெப்பக்காற்று வீசியது.

''ஆரெண்டாலும் வாருங்கோ'' ''ஐயோ'' பெருங்குரலில் கூவினான். இரண்டு மூன்று பேர் ஓடிவரும் சப்தம் கேட்டது. தூக்க முயற்சித்தான். தலைப்புறத்திற்குக் கையைக் கொடுத்து அணைத்து மெல்லத் தூக்கினான் மற்றும் ஒருவர் கால் பக்கத்தில் பிடித்துக் கொள்ள - இரத்தம் வடிந்து கொண்டிருந்த கையை இன்னும் ஒருவர் தாங்கிக் கொண்டார். தூசுப் படலத்தையும், புகைமண்டலத்தையும் கடந்து வெளியே வந்தபோது சைகையை ஒலித்தபடி 'அம்புலன்ஸ்'' வாகனம் நின்று கொண்டிருந்தது. அதிலிருந்தவர் இறங்கி ஓடினார். தூக்கி வந்தவரின அருகில் சென்று உதவினார். 'வேறையும் காயம்பட்ட ஆக்கள் இருப்பினம். நீங்கள் போய்ப் பாருங்கோ'' என்று கூறியபடி காயம்பட்டவரின் தலையை தன் கைக்கு மாற்றிக் கொண்டார்.

''அம்மா, தாயே'' என்று வீரிட்ட ஒரு அலறலுடன் காயம்பட்ட அந்த மனிதன் தனது இறுதிமூச்சை விட்டுக் கொண்டான். தேகம் விறைத்துக் கொண்டது. ''அப்ப இதை 'அம்புலன்சில' ஏத்த வேண்டாம். அந்த மரத்திற்குக் கீழ இதை வளத்துவம். ஒரு பாய் போடுங்கோ'' பாய் எடுக்க விரைந்த நிமலனின் கண்களில் பச்சைநிற சீலைத் துண்டொன்று பெரிதாகத் தென்பட்டது. அதனைக் கொண்டு வந்து விரித்தான். சடலம் கிடத்தப்பட்டது. காயமுற்றவர்கள் எவரும் இருக்கின்றார்களா? தேடும் முயற்சிகள் தீவிரமாகின அந்த வேளையில் பச்சைநிறசீலைத் துண்டு ஒன்று முடிச்சு போட்டபடி நிலத்தில் கிடந்து காலின் விரல்களுக்கு இடையில் தட்டுப்பட்டது. குனிந்து எடுத்தான் ஐந்து ரூபாக் குற்றியொன்றுடன் பத்து ரூபா நோட்டும், இருபது ரூபா நோட்டும் சீலைத் தலைப்பில் வைத்து முடியப்பட்டிருந்தது.

ஃ ஃ ஃ

கற்குவியலாக சிதைந்து போய்க் கிடந்த யாகப்பர் கோவிலில் சடலங்களையும், காயமுற்றவர்களையும் தேடும் பணி தொடங்கியது. ஆங்காங்கே தென்பட்ட மனித அவயவங்கள் பாயில் கொண்டு வந்து ஒருங்கு சேர்க்கப்பட்டன. ''இதோ ஒரு கை'', ''இதோ ஒரு கால்''. ''இது தலையின் ஒரு துண்டாக இருக்கலாம்'', இங்கே ஒரு விரல் துண்டு'' என்றவாறான குரல்களுக்கும் மத்தியில் தேடுதல் தொடர்ந்தது இடிபாடுகளின் மத்தியிலிருந்து சேர்க்கப்பட்ட சதைத் துண்டங்கள் குவியலாக ஒரு ஓலைப் பாயில்.

எத்தனை பேர் இறந்திருப்பார்கள்? யார் யார் இறந்திருக்கக் கூடும்? இறந்தவர்களை எப்படி அடையாளம் காணலாம்? என்ற சிந்தனைகள் அங்கு பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் மத்தியில்

ஃ ஃ ஃ

பச்சை நிறச் சேலையும், வெள்ளை ரவிக்கையுமாக ''எங்கட அன்ட்ரி காலம கோயிலுக்குப் போனவா. என்ன ஆச்சுதோ'' விம்மலுடன் ஒரு இளம்பெண்வினாத் தொடுத்தாள்

அவளின் கேள்வி நிமலனுக்கும் கேட்டது வேற ஏதாவது அடையாளம் சொல்லுவீங்களா'' என மெதுவாகக் கேட்டான்.

அவள் விக்கித்து நின்றாள். ''தங்கச்சி அழாதையுங்கோ. அன்ட்ரிக்கு என்ன பேர்? உங்கடவிலாசம் என்ன

நிமலன் தொடர்ந்தான் எதுவுமே பேசாமல் மௌனமாக விறைத்து நின்ற அவளுக்கு ஏதாவது ஆறுதல் கூற. அவன் நினைத்தான். ''தங்கச்சி இப்பிடி வாங்கோ.'' அவனது அழைப்புக்கு கட்டுப்பட்டு ஒரு இயந்திரம் போல நகர்ந்தவள் மரத்திற்கு கீழே சடலத்தை நோக்கி ஓடினாள் அவளைத் தொடர்ந்தான் நிமலன்.

''ஐயோ! எங்கட அன்ட்ரி'' என்று சடலம் கிடத்தப்பட்டிருந்த சீலைத் துண்டைக் கையில் பிடித்தபடி விழுந்து கதறினாள்.

நிமலன் மௌனமாகினான் அவளது கதறல் ஓய்ந்த ஒரு கணப்பொழுதில் ''அன்ட்ரி காசு ஏதும் வைச்சிருந்தவவோ'' அவன் கேட்டான் ''ஓமோம் கோயிலால வரேக்க சீனி வாங்குறதுக்காக. 35 ரூபாய் கொண்டு வந்தவ'' விம்மலுக்கிடையே அவள் கூறினாள்.

''காசை சீலையில முடிந்து வைச்சிருக்கிறவவோ''

''ஓமோம்'' என்று அவள் கூறவும் நிமலன் காசு முடிச்சை எடுத்துக் காட்டினான் ஐந்து ரூபாக் குற்றியும் பத்து ரூபா, இருபது ரூபா நோட்டும் ''திருமதி புஷ்பமேரி அன்டன் எட்வேட்'' துண்டு துண்டாகச் சிதறிப் போய் விட்டாள் என்பதை உறுதிப்படுத்தும் தடயப் பொருளாக மாறிவிட்டிருந்தது.

ஃ ஃ ஃ

''சூசைப்பிள்ளை அண்ணையின்ரை சைக்கிள் எல்லே இது.'' முன்பக்கறிம் வளைந்து நெளிந்து கான்டில் சிதைந்து கிடந்த சைக்கிளின் சீற்றை மட்டும் வைத்துக் கொண்டு இதனை இனங்கண்ட கனிஸ்டஸ் அருகிலிருந்தோரிடம் வினா எழுப்பினான்.

''ஓம் போல தான்கிடக்கு. எதுக்கும் அவரிட்ட வீட்ட ஒருக்காப் போய் பார்ப்பம்'' எனக் கூறியபடியே ஓடினான் சுவக்கீன்.

வீட்டு வாசலிலேயே நின்றபடி 'அண்ணை, அண்ணை'' எனக் குரலெழுப்பினான். வெளிறிய முகத்தோடும், பயந்த விழிகளோடும் வந்த அமெல்டாவிடம் ''அப்பா எங்கை'' சுவக்கீனின்கேள்வி

''விடியப்புறமா போனவர்... இன்னும்வரலேல்லை எங்கை போனவரோ தெரியாது அம்மாவைக் கேட்பம்'' அவள் திரும்பினாள்.

''அவர் சந்தைப் பக்கமா போனவர் ஏன் தம்பி'' பிலோமினம்மாவின் கேள்வி.

''யாகப்பர் கோயிலடியில் அவரின்ரை சைக்கிள் கிடக்கு'' அவன் சொல்லி முடிவதற்கு இடையில் அவள் ஐயோ... என்று அலறியபடி கோயிலடியை நோக்கி ஓடினாள்.

சூசைப்பிள்ளை பொம்மர் குத்திக்கொண்டு பறந்து வந்தபோது கோயிலுக்குள்ள ஓடினதைக் கண்டதாக காயம் பட்டுக் கிடந்த அன்ரன் தெரிவித்தான். சூசைப்பிள்ளை இனி மீண்டு வரப் போவதில்லை என்பது இவ்வாறு தான் உறுதிப்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு ஞாயிறு காலையிலும் யாகப்பர்ஆலயத்திற்கு தவறாமல் வரும் றீற்றாம்மா அன்றும் காலையில் கோவிலுக்கு வந்திருந்ததாகவும் அவருக்கு என்ன ஆச்சுதோ என்று பதறியடித்தபடியும் றோஸ்மலர் வந்தாள்.

வளர்த்தப்பட்டுக் கிடந்த சடலங்களுக்கு மத்தியிலும் குவிக்கப்பட்டுக் கிடந்த சதைக் குவியல்களுக்கு மத்தியிலும் றோஸ்மலர்தனதுதாயை-றீற்றாம்மாவைத் தேடிக்கண்களைத்துளாவவிட்டுக் கொண்டிருந்தாள்.

அம்மாவுக்குஒன்றும்ஆகியிருக்கக்கூடாது. கர்த்தரேஅம்மாவைக் கைவிடாதேயும். என்றெல்லாம் அவளது உதடுகள் உச்சரித்துக்கொண்டிருந்தது. '' அம்மா! தனக்காக வாழாமல்... எனக்காக என்று எப்படியெல்லாம் வாழ்ந்தா... என்னுடைய ஒவ்வொரு சின்னச் சின்ன ஆசைகளைக் கூட பூர்த்தி செய்வதற்கு எப்படியெல்லாம் கஷ்டப்பட்டா... அம்மா... இல்லாட்டால் என்ர எதிர்கால வாழ்க்கைஎப்படிப்போகப்போகின்றது'' எனப் பலவாறாக மனம் அலை பாய்ந்து கொண்டிருக்க றோஸ்மலர் நின்று கொண்டிருந்தாள். இருந்தாற்போல திடீரென ''ஐயோ! என்ர அம்மா!'' என்றுஅலறியபடி வேரற்ற மரம் போல அந்தச் சதைக் குவியலின் மேல் சாய்ந்தாள். அவளது கைப்பிடிக்குள் '' இரண்டு விரல் துண்டுகளுக்குள் சிக்குப்பட்டுக்கிடந்தசெபமாலை.''

அந்த இடத்தை நோக்கி வந்த பங்குத் தந்தை 'ஆர்' என்ற ஆங்கில எழுத்துடன் கூடிய அந்தச்செபமாலையைக் கண்டதும் றீற்றம்மாவும் மரணமாகி விட்டாள் என்று ஊர்ஜிதப்படுத்தினார்.

ஃ ஃ ஃ

சதைக் குவியலில் இருந்து முழங்காலுக்கு கீழே துண்டிக்கப்பட்டு கிடந்தகாலொன்றை மட்டுமே கண்டெடுத்த மலக்கியாஸ் தனது மைத்துனன் செபஸ்தியானும் இறந்த போயிருப்பதாக கூறினான். கோயிலுக்குள்ளபோய் நிண்டால் குண்டு போடமாட்டாங்கள்... தப்பிவிடலாம் என்று அடிக்கடிமற்றவர்களுக்குஆலோசனைகூறும் செபஸ்தியான் அன்றும்விமானத்தின் மெல்லிய இரைச்சலைக் கேட்டதும்''கர்த்தர் தான் காப்பாற்ற வேணும்,, எனக் கூறியபடி கோயிலுக்கு ஓடி வந்ததாக மலக்கியாஸ் மேலும் விபரித்தான்.

'' கோயிலுக் குள்ளை அல்லது பள்ளிக் கூடத்திலபோய் இருங்கோ எண்டு தானே இவங்களும் அடிக்கடி நோட்டீசு போடுகிறவங்கள்'' எனப் பக்கத்தில் நின்ற ஒருவர் ஆமோதித்தார்.

'' மச்சானுக்குமோட்டாச் சைக்கிள் ஸைசலன்சர் சுட்டு முழங்காலுக்குக் கீழ பெரிய காயம் வந்து மாறின தழும்பு இருந்தது அதை மட்டும் வைச்சுத்தானே இப்பஅவரை அடையாளம் காணக் கூடிய தாய்க் கிடக்கு மிச்ச உடம்பு எங்க'' மலக்கியாஸ் கேள்வி எழுப்பினான் சிதைவடைந்த தலை, இரண்டு கைத் துண்டங்கள், இரண்டு கால் துண்டங்கள், மார்பு எலும்புக் கூட்டுப் பகுதி என்பனவற்றை எப்படி? எங்கே? தேடுவது.

சிதைவடைந்து போனது யாகப்பர் ஆலயமும், அப்பாவித் தமிழர்களின் உடல்களும் மட்டுமல்ல

# சவூதி அரேபியாவில் எம்மவருக்கு நேர்ந்த கதி!

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வயது 43 உடைய கதிரவேலு பாலசுந்தரம் என்பவர் சவூதி அரேபியாவின் தலைநகர் றியாட்டில் இருந்துகிட்டத்தட்ட 60 கி. மீ. தொலைவில் உள்ள Muzahmiya என்ற இடத்தில் Sultan Al baiedest என்ற கொம்பனியில் 11 வருடமாக வேலை செய்துவந்துள்ளார். யூன் 25-ம் திகதி பாபர் மசூதி பிரச்சினை சம்பந்தமாக கேரள முஸ்லிம்களுக்கும் தமிழ்நாட்டு இந்துக்களுக்கும் இடையில் கைகலப்பு ஒன்று ஏற்பட்டது, இதன் போது இவர் அந்த இடத்தில் இல்லை. இதே நேரம் இவர் கொம்பனியில் வேலை செய்து கொண்டிருந்தார். சம்பவம் நடந்த நேரம் இரவு 6.30 தொடக்கம் 7.30 மணிக்கிடையிலாகும்.

இவரது வேலை இரவு 10 மணிக்கே முடிந்தது. இவர் தனது அறையில் வந்து படுத்தபின் இரவு 1 மணியளவில் தமிழ்நாட்டு இந்துக்களுடன் கை கலப்புச் சம்பந்தமாக இவரும் கைது செய்யப்பட்டார். இதன்போது தான் இலங்கையன் எனவும் தனக்கும் இச்சம்பவத்திற்கும் ஒரு தொடர்பும் இல்லை என்றும் இவரும், இவரது அறையைச் சேர்ந்த வங்காள தேச முஸ்லிமும் கூறியபோதும் காவல்துறையினர் அதைப்பொருட்படுத்தாது விட்டனர். கைதின்போது இவரிடம் ஒரு முருகன் படம் இருந்தது. பின் மதகுரு (முதபா) வினால் 3 மாதச் சிறைத்தண்டனை இவருக்கு விதிக்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் இவரின் விருப்பமின்றி இவரிடமிருந்து இரத்தம் எடுத்தார்கள் மூன்று முறை மொட்டை அடித்தார்கள். சிறைத்தண்டனையின் இறுதிக் காலத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 100 அடி கொடுத்தார்கள் இதன்போது ஒரு காவல்துறையினரும், ஒரு மதகுருவும் (முதபா) கூட நிற்க இன்னுமொரு மதகுரு (முதபா) அடிப்பார். இதன்போது முஸ்லிமாக மாறும்படி கூறுவார்கள். மொத்தம் 300 அடி கொடுத்தார்கள். இவர் மொத்தமாக 71 நாட்கள் கிட்டத்தட்ட (2 1/2 மாதம், சிறையிருந்தார். பின் அதாவது செப்ரெம்பர் 3-ம் திகதி விடுதலை செய்யப்பட்ட நாளே கொழும்பிற்குத் திருப்பியனுப்பப்பட்டார் இவர் கொழும்பில் தங்குவதற்கோ அல்லது அங்கிருந்து வல்வெட்டித்துறைக்கு வருவதற்கோ சவூதி அரசு இவருக்கு எதுவித நிதியும் கொடுக்கவில்லை. ஆனால் முறைப்படி இவரது 11 வருட சேவிஸ்காசு 800 றியாலும், 6 வருடமாக இவர் தொடர்ந்து 40 றியால்படி செலுத்திய காப்புறுதிப் பணமும் இவருக்கு வழங்கப்படவில்லை. இவர் கைதாவதற்கு முன்பு கடமையாற்றிய 3 மாதம்பளமாவது கொடுத்திருக்கவேண்டும். இவை எதுவுமே இவருக்கு வழங்காது கைதாகும்போது இவர் அணிந்திருந்த உடையுடனேயே திருப்பிபனுப்பினார்கள். இப்படி நடக்கும் என்று இவர் சிறையிலிருக்கும் போதே உணர்ந்ததால் சிறைச்சாலையிலுள்ள பாகிஸ்தான், பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், தாய்லாந்தைச் சேர்ந்தவர்களிடம் 5 றியால் படி கேட்டுப்பெற்ற காசிலேயே தனது சொந்த ஊரிற்கு வந்தார். ஆனால் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாடு, கேரளா, பம்பாய், ராஜஸ்தான், டில்லி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள்) றியால் கூடக் கொடுக்கவில்லை எனக்கூறி இவர் ஆதங்கப்பட்டார்

# ஒற்றுருக்கலைஞர் ஸ்ரீ ஆனந்தராஜன்

**1992** டிசம்பரில் ஒற்றுருக் கலைஞர் ஸ்ரீ ஆனந்தராஜனைக் கௌரவிக்கும் முகமாக கைதேர்ந்த மரக் கைவினைஞர் (Wooden art Crafts Manship) சான்றிதழை ஒரு பாராட்டு விழாவில்றோட்டறிக் கழகம் அவருக்கு வழங்கியது.

முப்பத்திமூன்று வயதான ஆனந்தராஜன் ஒரு வித்தியாசமான மனிதர். விளம்பரத்தில் நாட்டமில்லாதவர். விளம்பரத்தின் துணை இல்லாமல் ஒற்றுரு தயாரிக்கும் (Block - Making) தொழிலில் இவருக்கு வாடிக்கையாளரின் ஆதரவு பெருகி வருகிறது.

தான் பிறந்து வளர்ந்த நாச்சிமார் கோயிலடியில் வீட்டின் தாழ்வாரத்தில் மிக நெருக்கமான இடத்தில் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார். வீட்டுக்குப் பின்புறத்தில் சாய்வாக நீடிக்கப்பட்ட கூரையின் கீழ் உள்ள பகுதி தொழிலைத் தாக்குப் பிடிப்பதற்கு ஏற்றதாகஇல்லை தான். சகஜமானவசதியில்லாத பட்டறை.

நாம் அவரைச் சந்தித்த போது, மரக்கட்டையில் படம் ஒன்றை அற்புதமாகச் செதுக்கிக் கொண்டிருந்தார். இப்படி மரக்கட்டையின் ஒரு பக்கத்தில் ஒற்றுரு தயாரிக்கும் தொழில் நுட்பத்தைப் பார்த்தால், இப்போதுள்ள தடைநிலைமைகளால் ஏற்பட்டுள்ள உலோகப் பொருள்கள் தட்டுப்பாடு காரணமாக ஒற்றுருத் தொழிலுக்கு யாழ்ப்பாணத்தில் வாய்ப்புகளே இல்லைஎன்று கூறுவோருடன் உடன்பட முடியாது.

கருமமே கண்ணாயிருந்த ஆனந்தராஜனிடம் தயங்கியபடி விஷயத்தைச் சொன்னோம் முதலில் பின்னடித்தவர் பின்பு உற்சாசமாக எங்களுடன் பேசச் சம்மதித்தார். இதன் காரணமும் தெரிந்தது.

''விழாக்களும், விளம்பரங்களும் சில சமயங்களில் இக்கட்டான நிலைக்குத் தள்ளிவிடும். தற்பெருமை ஏற்பட்டுத் தொழிலில் தள்ளாட்டம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். கவனமாக இருக்க வேண்டும் என்று எனது குருநாதர் சிற்பாசாரியார் செல்லையா எனக்குச் சொல்லியிருக்கிறார். விளம்பரம் எதுவுமில்லாமல் தொழிலை வளர்க்க வேண்டும் என்பதுதான் எனது இலட்சியம். ஆனாலும், எனது தொழிலைப் பற்றி மற்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உங்கள் கட்டாயத்தில் கதைக்கிறேன்'' என்று கூறிவிட்டுக் கதிரையில் அமர்ந்து கொண்டார். முகத்தில் எந்த விதச் சலனமும் இல்லை.

இந்தச் சிரமத்தினால் தானோ என்னவோ எம்முடன் பேச முதலில் அவர் தயங்கினார்.

> ஸ்ரீ ஆனந்தராஜன் கைதேர்ந்த ஒற்றுருக் கலைஞர். நூல்கள், சஞ்சிகைகளுக்கென விதவிதமாக ஒற்றுருக்களைச் செய்திருக்கிறார். இவரது உளி அழகாகச் சிறைப்படுத்திய ஒற்றுருக்கள் பல.
>
> **சந்திப்பு - மதன்**

''மரத்தில் செதுக்கி ஒற்றுருச் செய்வதும் உலோகத்தகட்டில் செதுக்குவதும் யாழ்ப்பாணத்தில் இப்போது நடைபெறுகின்றது. உலோகத் தகட்டில் செதுக்குவது ஓரிருஇடங்களில்தான் நடைபெறுகின்றது உலோகத் தகட்டில் ஒற்றுருக்கள் செய்வதற்கான செலவு இப்போது ஏறி விட்டது. மறுபுறம் அதற்கான பொருள்களுக்கும் தட்டுப்பாடு 6×6 அங்குல அளவில் உலோகத் தகட்டில் ஒற்றுரு செய்ய ரூபா ஆயிரம் என்றால் நான் இருநூற்றிஐம்பது ரூபாதான் வாங்குகிறேன். சிறிலங்கா அரசின் தடை காரணமாக 'ரிஸ்சீற்' மற்றும் இரசாயனப் பொருள்கள் யாழ்ப்பாணத்துக்கு வரத்தில்லை என்று கூறிவிட்டால் தீர்ந்து விடுமா? உள்ளூரில் கிடைக்கும் சமண்டலை அல்லது யாவரணைக் கட்டைகளில் வேண்டிய படத்தையோ, எழுத்தையோ செதுக்கலாம் மரம் செதுக்குவதற்கான கூரிய முனையுள்ள பல தரப்பட்ட உளிகளையும் நானே செய்து கொள்ளுகிறேன். அவற்றைக் கடைகளில் வாங்க முடியாது.''



''வரையபப்பட்ட படங்களைக் கார்பன் பேப்பர் வைத்து அழுத்தப்பட்டு மரக் கட்டைகளில் பதிந்த படங்களைச் செதுக்கி ஒற்றுரு செய்கின்றேன். நுணுக்கமான படங்களைச் செதுக்குவதென்றால் கூலி கொஞ்சம் அதிகம் நுணுக்கமான ஒரு பெரிய படத்தைச் செதுக்கி எடுக்கசுமார் எட்டு மணித்தியாலம்தேவை. சாதாரண படங்கள் என்றால் ஐந்து ஆறு மணித்தியாலங்களில் முடித்து விடலாம். புது அம்சங்களைப் புகுத்த வேண்டும் என்றாலும் புகுத்தலாம் உதவியாளர் என்று எவரும் இல்லை இத்தொழிலைச் சுய தொழிலாகவே செய்து வருகிறேன்'' என்று சிரித்துக் கொண்டார்.

இந்தத் துறையில் ஆனந்தராஜனுக்குத் தொழில் நுட்ப விஷய ஞானம் நிறைய உள்ளது. தொழிலில் வெகுதூரம் முன்னேறியிருக்கிறார். ஒரு புதிய அம்சமாக இப்பொழுது இருவகையான வர்ணக் கலவைகளுடன் கூடிய படங்களையும் செதுக்கி ஒற்றுருக்களை உருவாக்கி உள்ளார் ஓவியர் ரமணியுடைய ஓவியங்கள், கேலிச் சித்திரங்கள்... கூடவே மல்லிகை, வெளிச்சம், ஆதாரம், பாடசாலைச் சஞ்சிகைகள் மற்றும் நூல்களுக்குப்படங்களும், அட்டைப் படங்களும் ஆனந்தராஜனின் கைவரிசை. இவருக்கு இயல்பாகவே வரையவும் வருகின்றது படங்களை மரத்தில் செதுக்கியும் வைத்திருக்கிறார்.

''முற்றிலும் லாபகரமாக இயங்கும் தொழில் என்றும் கூற முடியாது. ஒரு விஷயம். எனக்கு படம் ஒன்றை செதுக்குவதற்கு அதிகநேரமாகும். படங்களைக் கலை அம்சத்துடன் செதுக்குவதுதான் மிகவும் சிரமமான வேலை. எனக்கு என்னவோ, சில நாட்களில் ஒரு நாளைக்கு ஒருபடத்தைத்தான் செய்ய முடியும். எனக்கு இன்னும் திருமணமாகவில்லை. ஆறு பேர் கொண்டகுடும்பத்தின் பொருளாதாரத்தை உத்தரவாதம் செய்வதும் எனது உழைப்புத்தான். வரவைவிடச் செலவு அதிகம். பெரிய தொழில் முயற்சிகளில் கையை நனைத்துக்கொண்டு மூக்குடைபட எனக்கு விருப்பமில்லை', என்றார் அவர்.

ஆனந்தராஜன் எப்படி ஒற்றுரு தொழிலைப் பழகிக் கொண்டார்?

''ஒற்றுரு வேலை ஏதோ எனக்குத் தற்செயலானதல்ல. எங்கள் குடும்பம் கைவினைஞர்குடும்பம். எனதுதகப்பனார் நடராஜா ஒரு நகைத் தொழிலாளி. அவருடைய கலைப்பார்வைவிசாலமானது சிறுவயதிலிருந்தேதகப்பனார் தங்க நகைகள் செதுக்குவதைப் பார்த்து வியந்திருக்கிறேன். அத்துடன் எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில்தான் சிற்பாசாரியார் செல்லையா அவர்களின் வீடும். ஒரே வளவில் நாங்கள் இருந்ததால் அவர் வீட்டைக் கடந்துதான் போகவேண்டும். சிற்பாசாரியார் உருவங்களை நுணுக்கமாகச் செதுக்குவார். அழகும், எளிமையும் அவரது சிற்பங்களில் கொஞ்சி விளையாடும். இப்படிச்சிற்பங்களைச் செதுக்குவதுதான் எனது விருப்பம். ஆசாரியார் சினிமாப் படப் போஸ்டரும்வெட்டுவார். 1977 இல் சிவாஜி நடித்த ஞான ஒளி படத்துக்குப் போஸ்டர் வெட்டும் போது அவருடன் நானும் சேர்ந்துகொண்டேன். கொஞ்சம் கொஞ்சமாக 1981 வரை அவரிடம் வேலை பழகினேன். அதன் பிறகு சுயமாகத் தொழில் செய்கின்றேன். ஆரம்பத்தில்புடைவைக்கடை மற்றும் விளம்பர ஒற்றுரு வேலைகள் தான் என்னைத் தேடி வந்தன இப்போது எல்லாப் படங்களையும் செதுக்குகிறேன். பார்வையை ஒருமைப்படுத்திக் கூர்மையான கவனத்துடன் செதுக்க வேண்டும். கஷ்டமானவேலைதான். 'ஆனால் அதிலும் ஓர் இன்பம் இருக்கிறது.' என்று கூறும் ஆனந்தராஜன், 'இத் தொழிலுக்கு வருங்கால வாய்ப்பும் நிச்சயமாக இருக்கிறது. இது குடிசைக் கைத்தொழில். தொழில் நுட்பத்தை விரும்புகிறவர்கள் தேடி வருவார்கள்.' என்றார்.


## யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)

# பதவிகள் வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பொதுமுகாமையாளர்**

சம்பளம் இல. 7,1505 - 75×6 - 100×6 - 2555. (புதிய சம்பளத் திட்டம்) இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

கல்வித் தகைமைகள் :

அ) கூட்டுறவுப் பணியாளர் 8-வது சம்பளத் திட்டத்தில் மூன்று வருடங்களுக்குக் குறையாது வேலை செய்த அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 9 வது சம்பளத் திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வையில் ஆறு வருடங்களுக்குக் குறையாது வேலை செய்த அனுபவம் உள்ளவர். அல்லது,

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரி தராதரப் பத்திரம் அல்லது, அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் | கைத்தொழில் நிறுவனத்தில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாது வேலை செய்த அனுபவமுள்ளவர். அல்லது,

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரம் (உயர்தரம் | கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக| கைத்தொழில் நிறுவனத்தில் முகாமை மட்டத்திலான பதவியில் எட்டு வருடங்களுக்குக் குறையாது வேலை செய்த அனுபவமுள்ளவர்.

**2. கணக்காளர்**

சம்பளம் இல. 9 (புதிய சம்பளத் திட்டம்) 1105 - 60x4 - 75x11 - 2170. இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

கல்வித் தகைமகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 10ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்காளர் | கணக்காய்வாளர் பதவியில் மூன்று வருடங்களுக்குக் குறையாது வேலை செய்த அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்காய்வாளர் | கணக்குப் பதிவாளர் / கணக்கு அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ளவர். அல்லது,

ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவாளர் கல்வி நிலையத்தின் இறுதிப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனத்தில் கணக்காய்வாளர் | கணக்காளர் | மேற்பார்வையாளர் மட்டப் பதவியில் வேலை செய்து நாலு வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ளவர். அல்லது.

இ) கூட்டுறவுப் பணியாளர் அல்லது தராதரப் பத்திரம் (உயர்தரம்) | க. பொ.த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட 3 பாடங்களுடன் கணக்காளர் | கணக்காய்வாளர் | மேற்பார்வையாளர் மட்டப் பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாது வேலை செய்த அனுபவமுள்ளவர்.

மேற்படி பதவிகளுக்கான வயதெல்லை 18 - 40 இற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது கூட்டுறவுப் பணியாளருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இவர்கள் தமது சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

இப்பதவிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும்
தலைவர், ''யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்'',
இல 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 22-12-1993**
**பி. ப. 3.00 மணிக்கு முன்பு**

(சி-8082) **தலைவர்**



## தொழில்நுட்பக் கல்லூரி

# இறுதிப் பரீட்சைகள்-1993

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர்கள் தத்தம் துறைத் தலைவர்களுடன் தமது மாணவ பிரவேச அனுமதிச் சீட்டுடனும் உரிய பரீட்சைக் கட்டணத்துடனும் தொடர்பு கொண்டு 1993-12-17-ம் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவும்.

தொழில்நுட்பக் கல்லூரி, க. ஜெயரத்தினம்
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். அதிபர்
1993-12-07
(சி-8084)

# புதுவை ஒரு விடுதலைக் கவிஞன்

பேராசிரியர் கா. சிவத்தம்பி

7-11-1993 அன்று புதுவை இரத்தினதுரையின் 'நினைவழியா நாட்கள்' கவிதை நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் ஆற்றிய மதிப்பீட்டுரையிலிருந்து சில பகுதிகள்.

'நினைவழியா நாட்கள்' என்கின்ற இந்தக் கவிதை நூல், இன்று தமிழ் பரந்திருக்கின்ற நிலையில், நமது பிரச்சினை ஒரு சர்வதேசப் பிரச்சினையாக உலவுகின்ற அந்த மட்டத்தில், புலம்பெயர்ந்து தமிழர்கள் பல்வேறு இடங்களில் வாழுகின்ற தன்மைகள் காரணமாக மிக ஆழமாக விமர்சிக்கப்படப் போகிற, மிக ஆழமாக வாசிக்கப்படப் போகிற ஒருநூல், இன்றைய காலகட்டத்தில் இருக்குமேயானால் 'அது நினைவழியா நாட்களாகத்தான் இருக்கப் போகின்றது. போராளிகளினுடைய மனப் பக்குவத்தன்மை யாது? இவைகளை உந்துகிற சக்திகள் யாவை? என்பனவற்றையெல்லாம் அறிந்து கொள்வதற்கு இந்தக் கவிதைநூல், ஒரு மிக முக்கியமான ஆவணமாக அமையப் போகிறது.

அரசியல் இயக்கங்களின் வரலாற்றை, அவற்றின் உட்கிடக்கையை, அவற்றின் உந்துதல்களை விளங்கிக் கொள்வதற்கு அந்த இயக்கங்களோடு சம்பந்தப்பட்டவர்களுடைய எழுத்துக்கள் மிக முக்கியமாகும். அந்த வகையில்இந்தநூல்ஒரு மிக முக்கியமான நூலாக இருக்கப்போகிறது. இந்த நூலுக்குள்ள முகவுரையும், இந்தநூலினுடைய முக்கியத்துவத்தையும், அது அத்தியாவசியமாக ஆராயப்பட வேண்டிய தன்மையையும் அதிகரித்து வைத்துள்ளது எனவே, பல வழிகளில் இந்த நூல் மிக முக்கியமான ஒரு நூல்- புதுவையினுடைய கவிதைத் தொகுதியின் மூலம் புதுவை என்ற கவிஞனுடைய ஆளுமையின் வளர்ச்சியையும் அவருடைய கவிதையினுடைய ஒரு சில தன்மைகளையும் பார்க்கலாம் என்று கருதுகிறேன்.

ஏனெனில், இன்று நடக்கிற தமிழ் விடுதலைப் போராட்டத்தில் மிக முக்கியமான ஒரு கவிஞர் புதுவை. அதுவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ''கவிக்குரல்'' என்று கூறப்படத்தக்க ஒரு பெருமையை புதுவை ஏற்கனவே ஈட்டிக் கொண்டவர். இந்த நூலால் அதை நிறைவேற்றிக் கொள்கிறார்.

இப்படியான ஒருவருடைய நூலை மதிப்புரை செய்கின்ற பொழுது இந்த வேளையில் இந்தக் கட்டத்தில் நான் மிக பருவரைவாக இரண்டு விடயங்களைப் பற்றி மாத்திரம் பேச விரும்புகிறேன். ஒன்று அவர் எவ்வாறு ஒரு விடுதலைக் கவிஞரானார். (Poet of Liberation) என்பது.

புதுவைபாடுவது Liberation பற்றி, தளைநீக்கங்கள் பற்றி விட்டு விடுதலையாகி நிற்கின்ற நிலைமை பற்றி அந்தத் தன்மை புதுவை இரத்தினதுரை என்கின்ற கவிஞனுக்கு எவ்வாறு வந்தது? அந்தப் பரிணாம வளர்ச்சி யாது? அதனைச் சற்று அறிந்து கொள்ளலாமா? என்பது ஒன்று. இதற்குத் தளமாக அமைகின்ற சில பண்புகள் யாவை?

புதுவை கவிதை எழுதத் தொடங்கி நீண்டகாலம். புதுவையினுடைய கவிதை எழுத்தும், புதுவையினுடைய அரசியல் சார்ந்த நிலைப்பாடும் ஏறத்தாழ ஒரு வயது உடையன என்று சொல்லலாம்.

புதுவையினுடைய அரசியல் நிலைப்பாடு யாது? புதுவையினுடைய அரசியல் போக்கிலே ஒரு தன்மையை, ஒரு போக்கினை காண முடிகிறதா என்று பார்த்தால், இந்த மானிடத்திற்காகத் தன்னை வரித்துக் கொள்ளுதல், மானிடத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுகிற தன்மை ஆங்கிலத்திலே சொல்வார்கள் The human Commitment என்று அதே மனித இனத்தின்பால் கொண்ட நேயம் தான் இன்று புதுவையைப் புலிகளோடு சேர்த்து வைத்திருக்கிறது.

இதுவரை முதலிலே ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பேசுகிறவனாக, ஒடுக்கப்பட்ட ஒரு வர்க்கத்துக்குப் பேசுகிறவனாக, கவனிக்கப்படாத புறக்கணிக்கப்படுகின்றஏழை மக்களுக்கு பேசுகிறவனாக தொடங்கிய புதுவை இன்று புறக்கணிக்கப்பட்ட ஒடுக்கப்படுகிற ஒரு இனத்துக்குப் பேசுகிறவனாக மாறியிருக்கிறான்.

நூலின் வாக்குமூலத்திலே இதை நாங்கள் காணலாம்.

உலகத்தின்,
தன்னினத்தின், மனுக்குலத்தின்,
சோகத்தைத் தூக்கி மடியிலே கட்டுவான்
வீரத்தை எடுத்து முடியிலே பதிப்பான்
தன்னினம்
விடுதலைக்குவிலைகொடுக்கும் போது
கவிஞனின் கவிதை கைவாளாகிக் கொள்கிறது
பூக்களுக்கு ஏன் பூத்தோமென்று தெரியாது
வாய்க்காலில் ஓடிவரும் நீருக்குப்
போகுமிடம் தெரியாது
ஆனால்,
கவிஞனுக்கு தன் பிறப்பின் அர்த்தமும்
போகும் வழியும் தெரியும்

இந்த வாக்குமூலம்தான் புதுவையினுடையஅடிப்படையான மனிதநேயத்தை மனிதனுக்காகப் பாடுபடுகிற தன்மையை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. இந்த அடிப்படையான தன்மையை அதில் மாத்திரமல்ல பல்வேறு இடங்களில் காணலாம்-

இன்றைய கட்டத்தில். இன்னலுறுகின்ற தமிழ் மக்களுக்காக, அந்த மக்கள் படுகின்ற அவலங்களுக்காக, அந்த அவலங்களில் இருந்து அந்த மக்கள் விடுவிக்கப்பட வேண்டும்என்பதற்காக இந்த மனிதாயுதக்குரல் ஓருவீறாப்பான பெலப்புக் குரலாக மேலே கிளம்புகிறது-

இங்கேதான் எந்த ஒரு மனித நேயம் எவ்வாறு அவனை ஒரு புரட்சிவீரனாக மாற்றுகிறது- ஒரு வகையான புரட்சியிலிருந்து இன்னொரு முற்றுமுழுதான புரட்சிக்குக் கொண்டுவருகிறது என்பது தெரியவருகிறது-

எங்கள் வடக்கும் கிழக்கதுவும்
எந்தவிதமான இருள் சூழ்ந்து கிடக்கிறது.
அரசபடைகள் என்ற அரக்கர் பிடியினிலே
கரையும் தமிழ் நிலங்கள்
கண்ணீரில் தெக்கிறது
வெள்ளம் போல் பாய்ந்தார்கள் வெறியர்கள்
நாங்கள் இதில் அள்ளுண்டு போனோம்
அடக்குமுறைக்குள்ளானோம்

இந்த அள்ளுண்டுபோன நிலைமைக் கெதிராக, அடக்கு முறைக்கு எதிராகப் போகின்ற நிலைமைக்காகப் போராடுகிற குரல்தான் புதுவை இரத்தினதுரையினுடைய குரல். ''போதிமரத்துப் புத்தா உன் போதனைகள் பாதியிரவில் பழிக்கப்படும்போது, நீதிக்காக எங்கள் நிகழ்காலம் நிமிர்கிறது! இந்த நிமிர்வு மனிதாயுதத்தின் நிமிர்வு, இந்த நிமிர்வு மனித விடிவுக்கான நிமிர்வு. இப்படிப் பார்க்கிற பொழுது தான் ஒரு மிக முக்கியமான உண்மையொன்று நமக்குத் தெரியவருகின்றது. புதுவை இரத்தினதுரை தமிழ்த்தேசியயத்திற்கும், தமிழ்த்தேசிய விடுதலைக்கும் வருகின்ற வழியானது அடிப்படையில் மிக முக்கியமான ஒன்றாகும் தமிழ் மக்கள் இன்று இன்ரீதியாகவும் ஒரு ஒடுக்குமுறைக்குட்பட்ட முறையிலும் அனுபவித்துக்கொண்டுஇருக்கின்ற அருந்தற்பாடுகளிலிருந்தும் விடுபடவேண்டுமென்கின்ற ஒருதன்மை புதுவை இரத்தினதுரையை தமிழ்த்தேசியத்திற்குள் கொண்டு வந்திருக்கின்றது. இதுஒரு மிக முக்கியமான விடயம். இதனை நாங்கள் பல பாடல்களிலே காணலாம். ''நெருப்புவீசும்நிலவு'' என்கின்ற பாடலிலே அது தெரிகிறது.




புதுவை இரத்தினதுரையை எடுத்துக் கொண்டால் அவர் இந்த விடுதலைக்கு வருவதே தமிழன் எந்தவிதமான அருந்தல்களிலிருந்தும் விடுபட வேண்டும் என்கின்ற ஒன்றுக்காகத்தான்- இது தான் கவிஞர் புதுவை இரத்தினதுரையை ஒரு Poet of Liberation ஆக ஆக்கி வைக்கிறது என்று நான் கருதுகிறேன்.

புதுவை இந்தப் பாடல்களைப் பாடுவதற்கு வருகின்ற முறைமையானது எங்கிருந்து வருகின்றதென்றால் அவர் எதனைக் கண்டு துடிக்கிறார் என்றால் எதற்காக அவருடைய மனம் நோகிறது என்றால் பிய்த்தெறியப்பட்ட தமிழரின் வாழ்க்கையைக் கண்டு அவரது மனம் நோகிறது. இங்கு எங்கு பார்த்தாலும் சரி, கவிதை முழுவதிலும், பிய்த்தெறியப்பட்ட தமிழர் வாழ்க்கைதான் தெரிகிறது.

'எழுக புதிய வாழ்வு சமைப்போம்' என்கின்ற அந்தப் பாடலிலே இந்தப் பண்பு தெரிய வருகிறது. மற்றது தமிழர்களுக்கு வேண்டிய அந்த இறைமையானது ஏன் வேண்டும்? என்று கேட்கின்ற பொழுது அவர்சொல்கிறார்.

''எங்களது குச்சொழுங்கை எங்கும்
குடல் சரிந்த சடலங்கள்
பல்லால் கடித்துப் புதம்
பார்த்த முலைகளுடன்
எல்லாமிழந்துவிட்ட இளம்
வயதுக் கன்னியர்கள்,
சொன்னால் விளங்காது
செவிக்குள் அடங்காது...''

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கும், திராவிட விடுதலைப் போராட்டத்துக் குமுள்ள மிக முக்கியமான வித்தியாசம் ஒன்று என்னவென்று சொன்னால் தமிழீழத்திலுள்ள விடுதலைப் போராட்டம் எப்பொழுதும் முன்னோக்கியதாகும். இந்த உலகத்தினுடைய மிகமிக புதிய நவீனமான ஆயுதங்கள், மிகமிக நவீனமான சிந்தனைகள், மிகமிக நவீனமான கருத்துக்கள் எல்லாம் இந்தத் தமிழீழ விடுதலைப் போரிலே சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆனால்துரதிர்ஷ்டவசமாக தமிழ்நாட்டில் வேறு பல நியாயங்கள் காரணமாக அங்கு நடந்த போராட்டத்திலே எப்பொழுதும் பின்னோக்கிப் பார்க்கிற ஒரு தன்மை ஒன்று இருந்தது. இதனால் அவர்கள் வருகின்ற சவால்களை எதிர்கொள்ள முடியாமல் போய்விட்டது. இதனாலே தான் ஒரு காலத்திலே தமிழ்நாடு முழுவதையும் கட்டியாளக் கூடியதாக இருந்த, இருக்கக்கூடிய திராவிடக்கட்சி திராவிட இயக்கம் இன்று சிதறுண்டு போய்க்கிடக்கிறது. காரணம் அது தான் இந்த முன்னே போகிற தன்மை,

''இங்கு ஓர் புதிய எழுச்சி எழுந்ததுவும்
எங்களுக்கென்று ஓர் நிலத்தை
எல்லையிட விரும்பி
பூண்டோடு எமையழிக்கப் புறப்பட்ட
ஆதிக்கக் கூண்டை உடைக்க நாங்கள் புறப்பட்டதுவும்
அதற்காகத்தான் ..''

இதுவெறுமனேபழையபுகழ் பேசுவதற்காக அல்ல. இது முக்கியம். ஏனென்றால் அந்தத் தளத்தில் இருந்துதான் இந்தக் கவிதை பிறக்கிறது. எங்களுடைய மனிதாயுதம் பிறக்கிறது. நாங்கள்தொடர்ந்தும் அல்லற்படத் தயாராக இல்லை. நாங்கள் தொடர்ந்தும் உபமனிதர்களாக Sub Human beings ஆக வாழுவதற்கு தயாராக இல்லை. என்கின்ற அடிநிலையிலிருந்துதான் இந்தப் போராட்டம் கிளம்பியது. அதனாலேதான் இந்தப் போராட்டத்துக்கு உலகம் முழுவதிலும் ஒரு ஆன்ம வலு இருக்கிறது எத்தனையோ விதமான விகர்ப்புகள் கூறப்பட்டவிடத்திலும் இந்தப் போருக்கு ஒரு ஆன்ம வலு இருப்பதற்குக் காரணம் இது ஒரு ஒடுக்கப்பட்ட இனத்தின் குரல். அந்த ஒடுக்கப்பட்ட இனத்தின் கவிதைக் குரலாக நண்பர் புதுவை இரத்தினத்துரை விளங்குகிறார்.

இந்த யாழ்ப்பாணத்தைப் பற்றியமிகஅற்புதமான காட்சிகளை கவிஞர் இரத்தினதுரை வரைந்துள்ளார். நாங்கள் அறியாத, நாங்கள் அறிந்திருந்தும் நன்கு தெரிந்திருந்தும், சுவைக்க மறந்திருந்தும் சுவைக்கத்தெரியாது இவையெல்லாம்ரசித்துக்கொள்ளத் தக்க விசயங்கள்தானா என்பதைப் பற்றியே சற்றும் நாங்கள் யோசிக்காதிருந்த பல விசயங்கள், கிட்டியடித்தது, கிளுவைக்குக் கல்லெறிந்தது, தங்கச்சி கோலம் போட்டது, சங்கக்கடை வாச்சர் கதைத்தது, வல்லிபுரக்கோயிலுக்குப் போனது, வந்தது, இதுகளெல்லாம், அவர் பெரிய யாழ்ப்பாணன் என்கின்ற Romatic Image ஆக மாறுகிறது.

ஒன்றை மட்டும் அழுத்திக் கூற விரும்புகின்றேன். அதாவது இந்த மனிதநேயத்துடன் போராடுகிறபோது அவன் வாழ விரும்புகிற யாழ்ப்பாணம் அவன் வாழ விரும்புகின்ற தமிழீழம், அவன்வாழ விரும்புகிற அந்தப் பொதுவான தமிழ் மக்கள் வாழுகின்ற பிரதேசம், அன்பினால் பிணைக்கப்பட்டு, சமூக உறவினால் இணைக்கப்பட்டு அது வெறும் நிலமல்ல அது சதையும், நகமும் உணர்ச்சியும் உள்ள மக்களின் தொகுதி. அதுதான் கவிதைக்கு உயிர். அதனால் தான் இந்தக் கவிதைக்கு உயிர் இருக்கே தவிர, வெறுமனே உணர்ச்சியைப் படியாதாலேஅல்ல.

இந்த நாடு படுகிற அவஸ்தைக்கூடாகத்தான் இந்தக் கவிதையின் உயிர். அதனூடாக நாங்கள் ஒரு யாழ்ப்பாணத்தைப்பற்றிய ஒரு புதிய தரிசனத்தைக் காணலாம் அந்த வைகறைப் பொழுதும் வைரவர் முடக்கும் என்கின்ற யாழ்ப்பாணம் பற்றிய 99வது பக்கத்திலே உள்ள பாடல் எத்தனை ஒரு அற்புதமான காட்சி என்பது அப்பொழுது தெரியவரும்.

இப்படியான இந்தப்படிமங்கள் தொட்டுப்பார்க்கிற மாதிரி இருக்கும். ஸ்பரிச உணர்வு என்றுசொல்லுவார்கள் புதுவையினுடையவலிமை இந்த ஸ்பரிச உணர்வு இந்தத் தொட்டுணர்வு தருகிற தன்மையில் தங்கியிருக்கிறது.

பெண் விடுதலை பற்றிப் புதுவையினுடைய கருத்துக்கள் மிக முக்கியமானது. பெண்களைப் பற்றி எழுதுகிற பொழுது, 'நீ இவற்றையெல்லாம் விட்டுவிட்டு வா, 'என்று கூறுகிற இடங்கள் மிக முக்கியமானது, சில வேளைகளில் ஒருதகப்பனால் தான் அதைச் சொல்ல முடியும். யாழ்ப்பாணத்துத் தகப்பனால்தான் ஒரு பெண் பிள்ளை எவ்வளவு கஷ்டப்படலாம் என்பதைச் சொல்ல

(2ஆம் பக்கம் பார்க்க)

## வை. கோவின்

பாணி தீக்குளித்த பிறகு அவனது இறுதி ஊர்வலத்தில்· பேசப்போன பிறகு தான் என்னுள் ஆவேசம் எழுந்தது. அது வெளிப்படவும் செய்தது. நிலைமைகள் விறு விறுவென்று மாறிப் போயின எல்லோரும் என்னுடன் நிற்பதை தெரிந்து கொண்டேன்.

கேள்வி : உங்கள் பின்னால் நிற்கின்ற இந்தப்பெரும் ஆதரவை எப்படிப் பயன் படுத்தப் போகிறீர்கள்.

பதில்: இது அண்ணா உருவாக்கிய இயக்கம் தி மு. கழகம் சறுப்பு - சிவப்பு கொடி உதயசூரியன் சின்னம் எல்லாமே அண்ணா கொடுத்தவைதான் இதெல்லாம் கலைஞரிற்கு சொந்தமானதல்ல அவரிற்கு முன்னால் அண்ணா உருவாக்கி வைத்த பாட்டன் சொத்துக்கள் அதில் எனக்கு நிச்சயம் பங்கு உண்டு ! அறிவாலயம் உருவானதும் சொத்துக்கள் சேர்ந்ததும் மட்டும் கலைஞரின் முனைப்பால் இருக்கலாம் அதையும் கூட அந்த அளவு சொத்துக்கள் சேர்த்துக் கொடுத்ததில் - நான் உட்பட எல்லாத்தொண்டர்களுக்கும் பங்கு உண்டு! இதையெல்லாம் நான்தானே இத்தனை நாள் பாதுகாத்து வைத்திருந்தேன்' என்று கலைஞர் சொல்லக் கூடும். அதற்குத் தானே நாவலரைக் கூட விட்டுக் கலைஞரைத் தலைவராக வைத்திருந்தார்கள் ? தன் குடும்பத்தின் நலனுக்காக கட்சியைத் தலைவர் 'பாழடிக்கிறார்' என்ற எண்ணம் தொண்டர்கள் மத்தியில் வந்து விட்டதே. இனி எப்படி அவர் கையில் கட்சி இருக்க முடியும்.

கேள்வி : அப்படியானால் என்ன அர்த்தம் ? புதிய கட்சி ஆரம்பிக்கப் போவதில்லையா ? காங்கிரஸ் (ஐ) - காங்கிரஸ் (ஒ) என்று ஒரு காலகட்டம் வரை சொல்லப்பட்டது போலவா ? தி. மு. க. (கோ) என்று உங்களைச் சொல்லும் நிலை வருமா?

பதில்: முழுக்கச் சொல்ல விரும்பாமல் நழுவும் பளீர் சிரிப்பு.

நாங்கள் தான் உண்மையான தி மு க என்ற நிலை ஏற்படும் சிலருடைய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, தி மு க புதியதொரு பொலிவுடன் வலிமையுடன் தலை நிமிர்ந்து நிற்கும் அண்ணா காலத்துப் பெரியவர்கள் ஆசியுடன், தி மு க தொண்டர்கள் இதில் அணிவகுத்துப் புதியபாதை அமைப்பார்கள் இதையெல்லாம் பார்க்கப் போகிறீர்கள் தி மு க வில் மிகப்பெரிய மறுமலர்ச்சிஉண்டாகும் இனிவரும நாட்களில் சுதந்திரமாக, நல்ல முறையில் என் அரசியல் வாழ்வைக் கழிக்கலாம என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது, அண்ணாவின் பாதையில் கட்சியை நடத்திச் செல்லலாம் என்று திட்டமிட்டிருக்கிறேன்

அங்கே தகுதி இல்லாதவர்களுக்குப் பதவிகள் கிடையாது கட்-அவுட் விவகாரம் இருக்காது காலில் விழுவதெல்லாம் இனி நடக்காது காரில் தலைவர்கள் போகும் போது விலகு விலகு என்று பொதுமககளை விரட்டுகிற காட்சிகளைப் பார்க்க முடியாது சர்வாதிகார மனப்பான்மைக்கும் வெட்டிப் பந்தாவிற்கும் இனி இடமில்லாமல் தமிழக அரசியலை மாற்றிக் காண்பிப்போம்

கேள்வி: தேர்தலை எப்படி எதிர் கொள்ளப் போகிறீர்கள்?

பதில்: அதுபற்றி நான் இன்னும் நினைக்கவேயில்லை எந்த முடிவையுமே நானாக எடுப்பதில்லை எட்டு மாவட்டச் செயலாளர்கள், எஸ். கணேசன், திருச்சி மலர் மன்னன் பேன்ற முக்கியமானவர்களிடம் பொறுப்பைவிட்டு விட்டேன் அவர்கள் தான் பேசி முடிவெடுக்க வேண்டும்

கேள்வி: அமிர்த லிங்கம், பத்மநாபா, ராஜீவ் என்று பலரைப் படுகொலை செய்தவர்கள் விடுதலைப் புலிகள். இதற்குப் பிறகும் இப்போது மீண்டும் வன்முறை வழியை அவர்கள் பின்பற்றினால் அவர்களுக்கு ஆதரவு தரும் உங்கள் நிலை பெரிய தர்ம சங்கடமாக இருக்காதா ?

பதில் ; விபத்தில்அடிபட்டு துடிககிறவனைக் கூட என்னால் கண்டுசகிக்க முடியாது. எறும்புக்குக் கூட தீங்குவிளைவிக்க நினைக்காதவன் நான். வன்முறையை ஒரு போதும் ஆதரிக்கவில்லை

தமிழர்களிற்காகப் பாடுபடுகிற புலிகளின் நோக்கத்தைத் தான் ஆதரிக்கிறேன். போராட்டத்தின் ஒரு பகுதியாக சில கொலைகளைச் செய்திருந்தாலும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் அதன் தலைவர் அரபாத்தையும் இந்தியா வெறுத்துவிட்டதா? அகதிகள் முகாம்மீதே குண்டுவீச்சு நடத்தியபிறகும், இஸ்ரேலுடன் இந்தியா நல்லெண்ண உறவு ஏற்படுத்திக் கொள்ளவில்லையா?

கேள்வி; எம் ஜி ஆர் பற்றிய உங்கள் மதிப்பீடு?

பதில்: இப்போது தான் ஒரு உண்மை புரிகிறது... கலைஞர் கையில் சிக்கி எம் ஜி ஆர் என்னவெல்லாம் பாடு பட்டிருப்பார்! தன்மகன் மு க முத்துவை எம் ஜி ஆருக்கு போட்டியாக நடிகனாக்கி ''பிள்ளையோ பிள்ளை'' என்றார்! மதுரை மாநாட்டில் ஊர்வலத்துக்கு மு க முத்துவை தலைமை... மாநாட்டுக்கு முரசொலி மாறன் தலைமை. மகனும் மருமகனும்தான் முக்கியமாகிவிட்ட நிலை அப்போதே... எம் ஜி ஆரை வெளியே அனுப்பிய கலைஞர் அவர் மீது தான் பழிசுமத்தி நீலிக் கண்ணீர் வடித்து தொண்டர்களை நம்பவைத்தார். அதெல்லாம் கண்டு எம் ஜி ஆர் எப்படி வேதனைப்பட்டிருப்பார்.

இப்போது நான் பேசும் கூட்டங்களில் இதைச் சொன்னால் - எம் ஜி ஆர் பெயரைச் சொன்னால் அவரை எதிர்த்தே பழகிவிட்ட தி மு க தொண்டர்கள் கூடக் கை தட்டுகின்ற காட்சியை நான் பார்க்கிறேன் கலைஞர்மேல் உருவாகிவிட்ட வெறுப்புத் தான் இத்தனைக்கும் காரணம்! கலைஞர் சாயம் வெழுத்துவிட்டது... இன்று தொண்டர்களிடம் கலைஞர், எம் ஜி ஆர் மீது பழிசுமத்தியது போன்ற நாடகமாட முடியாது!

''ஒரு விஷயம் உங்களுக்குச் சொல்லவேண்டும்... எனக்கு எதிரான நடவடிக்கைகள்எதுவும் எடுபடாமல் போனால்மிக மட்டரகமான சில பிரச்சாரங்களை எனக்கெதிராக தூண்டிவிடவும்திட்டமிட்டிருக்கிறார்கள்என்றசெய்தி வந்தது அது பற்றி நான் கவலைப்படவும் இல்லை...! கொலைகாரன் என்ற உச்சக்கட்ட பழியையே கலைஞர் என்மேல் சுமத்தி விட்டபிறகு,அதைவிட பெரிய பழிவேறு என்ன இருக்க முடியும்...? அந்த வகையில் அவர் என்னைக் காப்பாற்றிவிட்டார்!''

நிறைய நம்பிக்கைகளோடு எழுந்தார் வை கோ...! வெளியே 'வாழ்க' முழக்கங்கள்மழை ஓசையோடு போட்டியிட்டது!

நன்றி; ஜூனியர் விகடன்

---


## யாழ்ப்பாணக் கல்லூரி
### பட்டப்படிப்புப் பிரிவு

JAFFNA COLLEGE · CEYLON · 1823 · 1872 · JESUS LIGHT CHRIST OF THE LIFE

**மக்கள் வங்கி**

**எழுதுவினைஞர் / சுருக்கெழுத்தாளர்**

தெரிவுக்கான, போட்டிப் பரீட்சைக்கான

**வகுப்புகள் ஆரம்பம்:**

**10-12-1993 மு. ப. 11-00 மணி**
**(இன்று வெள்ளிக்கிழமை)**

**முழுக்கட்டணம்: 175/- மட்டுமே**

(1) பேராதனை பல்கலைக்கழக 1994 / 95 கல்வி ஆண்டுக்கான G.S.Q. (B. Sc.) வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

காலம்: 05 - 12 - 1993

(2) B. A. Pa. I

ஆங்கில இலக்கியம்

ஆரம்பம்: 11 - 12 - 1993
மு. ப. 10·30 மணிக்கு

மெய்யியல்

ஆரம்பம்: 13 - 12 - 1993
பி. ப. 4-00 மணிக்கு

குறிப்பு: (1) G.S Q.(B Sc.)க்கு க. பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப் பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்
(2) 1993 ஆகஸ்ட் பரீட்சைகளுக்கு தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்.
(3) பின்வரும் பாடங்களில் 3 பாடங்களைத் தெரிவு செய்யலாம். (1) தூய கணிதம் (2) பிரயோக கணிதம் (3) புள்ளிவிபரவியல் (4) பொருளியியல்.

**20-12-93க்கு முன் விண்ணப்பிக்கவும்**

விபரங்களுக்கு:

**யாழ்ப்பாணக் கல்லூரி**
இல 464, ஆஸ்பத்திரி வீதி,
(வர்த்தக வங்கிக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

(சி-8087)


---


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரர்களிடம்இருந்துவிண்ணப்பங்கள் 1993-12-29-ம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

தற்காலிக உதவி விரிவுரையாளர்-

அரசறிவியல்

ஆற்றுகைக் கலை - கர்நாடக சங்கீதம் - வாய்ப்பாட்டு

ஆற்றுகைக் கலை · (நடனம்) பரதநாட்டியம்.

சம்பள அளவுத்திட்டம்

1993-12-31 திகதி வரை ரூபா 4,585 - (நிலையானது) மாதமொன்றிற்கு,

1994-01-01 இல் இருந்து ரூபா 5.270- (நிலையானது)மாதமொன்றிற்கு இத்துடன் நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றப்படியாக 1994 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சம்பளத்தின் 25 சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

1993 மே 12ஆம் தேதிய 9/93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப்படியாக600 /- ரூபா செலுத்தப்படும்.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களையும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும்20/- ரூபாவை நிகிக்கிளையில் செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் சிரேட்ட உதவிப்பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம்படிவங்களையும், விபரங்களையும்பெற விரும்புவோர்யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/நிதியாளர்பெயரில் பெறப்பட்ட 20 /- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் 23×10 ச.மீ அளவுடைய சுய முகவரியிட்டு 1 /- முத்திரையொட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு. விண்ணப்பிக்க விரும்புவோர் தனித் தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
1993-12-08

(சி-8088)


---


**அனைத்துலகப்பெண்கள் நாளை முன்னிட்டு**

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பினால் நடாத்தப்படும்

## இலக்கிய,ஓவியப் போட்டிகள்

1994-03-08 இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, தமிழீழப் பெண்களுக்கான இலக்கிய, ஓவியப்போட்டிகளை நடாத்த விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு முடிவு செய்துள்ளது.

இலக்கியப் போட்டிகள் சிறுகதை, கவிதை என்ற இரண்டு விடயத்தின் கீழ் நடைபெறும்.

ஓவியங்களை எந்த வகை ஓவியங்களாகவும் போட்டியாளர்கள் விரும்பியபடி வரையலாம்.

போட்டிக்கான விதிமுறைகள்:-

- ஃ படைப்புக்கள் தமிழீழப் பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்னெடுப்பதாகவும், அவர்களின் முன்னேற்றத்தைச் சுட்டுவதாகவும் அமைய வேண்டும்
- ஃ கவிதைகள் 35 வரிக்கு மேற்படாதனவாகவும், சிறுகதைகள் 4 பக்கங்களுக்கு மேற்படாதனவாகவும் இருக்க வேண்டும். ஓவியங்கள் போட்டியாளர்கள் விரும்பும் அளவில் வரையப்படலாம்.
- ஃ போட்டியாளரின் சொந்தப்பெயர், முகவரி, வயது என்பனதனியாக ஒருதாளில் எழுதப்பட்டு,படைப்புக்களுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்
- ஃ கடித உறையின் இடது பககமேல் மூலையில், ''அனைத்துலகப்பெண்கள் நாள் இலக்கிய,ஓவிய போட்டிக்கான படைப்புக்கள், என்று குறிப்பிடப்பட வேண்டும்
- ஃ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது
- ஃ போட்டி முடிவுத் திகதி—1994-01-20
- ஃ படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:

**சுதந்திரப்பறவைகள்,**
**வெளியீட்டுப் பிரிவு,**
**விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு,**
**கோண்டாவில்.**

தமிழீழப் பெண்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்குமுகமாக நடாத்தப்படும் இவ் இலக்கிய, ஓவியப் போட்டிகளில் கலந்துகொள்ளுமாறு அனைத்துப்பெண்களையும் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு கேட்டுக் கொள்கின்றது.

**விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு**

(சி-8080)

நூலகம் யாழ்ப்பாணம்

# சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பை சிதறடித்த இரண்டாம் கட்ட ஈழப்போர்!

பூநகரியில் சந்தித்தபெரும் தோல்வியுடன் சிறிலங்கா இராணுவ இயந்திரம் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியது. இராணுவக் கட்டமைப்பும், இராணுவத் தலைமையும் பெருமளவில் சிதைந்து போய்விட்டதென்றே கூற முடியும்.

சுமார் மூன்றரை ஆண்டு கால இரண்டாம் கட்ட ஈழப் போரில் சிறிலங்கா இராணுவம் தொடர்ச்சியாக சந்தித்துவந்த தோல்விகளின் உச்சமாக, அதாவது இராணுவ இயந்திரத்தை முடக்க கூடிய தோல்வியாக பூநகரித் தோல்வி அமைந்தது, இத்தோல்வியின் தாக்கமானது அரசியல் - இராணுவ தலைமைக்கும் இடையில் பெரிதும் முரண்பாட்டை வளர்த்ததோடு மட்டுமல்ல, இராணு தலைமை பதவி விலக வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் சிறிலங்காஇராணுவக் கட்டமைப்பு சிதைவானது, பூநகரியில் ஏற்பட்ட தோல்வியினால் சடுதியாக ஏற்பட்டதொன்றல்ல. 1992ஆம்ஆண்டு ஆரம்பத்தில் இருந்தே இராணுவக் கட்டமைப்புச் சிதையத் தொடங்கி விட்டது. ஆனால், இதன்தெளிவான வெளிப்பாடு 1992இல் ஏற்பட்ட இராணுவகட்டமைப்பு, மற்றும் கட்டளையிடும் அமைப்பில் ஏற்பட்ட மாற்றத்துடன் வெளிப்பட்டது.

ஆனாலும், கட்டமைப்பைத் தொடர்ந்து பாதுகாக்க எடுத்த முயற்சிகளும் தோல்வியே கண்டன. தோல்விகள்தொடரத் தொடர கட்டமைப்பு மாற்றங்களும் இடம்பெற்றன வாயினும், இராணுவவெற்றியென்பது தொலைவிற்குச் சென்றுகொண்டே இருந்தது. இறுதியில் இராணுவக் கட்டமைப்பு மாற்றமென்பது சலிப்பூட்டும் ஒன்றாகமாறும் நிலைக்கு வந்துள்ளது.

இராணுவக் கட்டமைப்பு 1992 ஆரம்பத்தில் சிதையத் தொடங்கியதாயினும் 1992 ஒகஸ்ட் 8ஆம் திகதி அராலியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலே சிறிலங்கா இராணுவத்தின் தலைமையைச் சிதைத்த முதலாவது தாக்குதலாகும். இத்தாக்குதலில் லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜயவிமலரெட்னா ஆகியோர் கொல்லப்பட்டமையானது, சிறிலங்கா இராணுவ இயந்திரத்தை இயக்கி வந்த முக்கிய சக்திகளை அழித்ததெனலாம்.

இரண்டாம்கட்ட ஈழப் போர் 1990இன் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டபோது சிறிலங்கா இராணுவக் கட்டமைப்புஒழுங்கானதாகவும், முழுப்பலம் பொருந்தியதுமாகவே இருந்தது. சுமார் 50,000பேர்வரையில் கொண்டிருந்த இராணுவத்தில், ஒரு லெப். ஜெனரல், ஐந்து மேஜர் ஜெனரல் என சிரேஷ்ட அதிகாரிகள் இருந்தனர். ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்களான இவ் அதிகாரிகள் சேவையின் அடிப்படையில் நீண்டகால அனுபவம் பெற்றிருந்தனர்.

அதேவேளை, போரைப் ''பாதுகாப்பு அமைச்சின் கூட்டு நடவடிக்கைத் தலைமையகம்'' - ஜே. ஓ. எஸ். எஸ். ஓ. பி. - வழி நடத்தியது இவ் அமைப்பானது, 1991ஆம் ஆண்டு இறுதிவரை பலமான அமைப்பாகவே இருந்தது. 1991 இறுதியில் அப்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் பதவிக் காலம் முடிவடையும் நிலையில், இராணுவக் கட்டமைப்பு, கட்டளையிடும் அமைப்பில் செய்யப்பட்ட மாற்றத்தின் மூலம் கூட்டுப் படை நடவடிக்கைத் தலைமையகம் - ஜே. ஓ. சி - உருவாக்கப்பட்டு அதன் தலைமைத் தளகர்த்தாவாக ஹமில்டன் வனசிங்காவும் நியமிக்கப்பட்டார். அத்தோடு, அவர் ஜெனரலாகப் பதவி உயர்வும் பெற்றார்.

இந்நிலையில், இராணுவ முதன்மை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் சிசில் வைத்தின்ரெட்னா இராணுவத் தளபதியாகப் பதவி உயர்த்தப்பட்டதோடு லெப். ஜெனரலாகவும் உயர்த்தப்பட்டார். இந்நிலையில், சுமார் 70,000 தாண்டிவிட்ட சிறிலங்கா இராணுவம் ஒரு ஜெனரலையும், ஒரு லெப். ஜெனரலையும் நான்குமேஜர் ஜெனரல்களையும் கொண்ட ஒரு சீரான அமைப்பாக தொடர்ந்தும் இருந்தது.

ஆனால் கட்டமைப்பு சீராகஇருந்திருப்பினும் இராணுவத் தலைமைப் பீடத்திற்கிடையில் முரண்பாடுகள் இக்காலத்திற்குள்ளேயே உருவாகத் தொடங்கி இருந்தது அதிகாரப் பகிர்வில், கூட்டுப் படை நடவடிக்கை தளகர்த்தாவிற்கும், முப்படைகளின் தளபதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடானது தீவிரமாகி இராணுவத்திற்குள் அணிகளை உருவாக்கும் நிலையும் உருவாகியது.

இதேசமயம் சுமார் ஒன்றரை வருடங்களைஇரண்டாம் கட்ட ஈழப்போர் கடந்திருந்தது. இந் நிலையில்சிறிலங்கா இராணுவம் இரண்டு வகையான யுத்த கதாநாயகர்களையும் கொண்டிருந்தது. 1988 ஆம் 1989 ஆம் ஆண்டுகளில் தென்னிலங்கையில் ஜே. வி- பி- கிளர்ச்சியை ஈவிரக்கமின்றி அடக்கிய லெப்- ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா தலைமையிலான தென்னிலங்கை யுத்த கதாநாயகர்களையும், வடக்கு-கிழக்கு போர் முனையில் தொடர்ச்சியாக இருந்த மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தலைமையிலான வடக்கு கிழக்கு யுத்த கதாநாயகர்களையும் உருவாக்கியிருந்தது- இதில் வடக்கு-கிழக்கு யுத்தக் கதாநாயகர்கள் நவீன துட்டகைமுனுக்கள் என பட்டம் சூட்டப் பெற்றிருந்தனர்- இதில் கூட்டுப்படைத் தலைமையகம் வடக்கு-கிழக்கு போர் முனைத் தளபதிகளுக்கு பக்க பலமாகவும் தலைமையையும் கொடுத்த அதேவேளை, அதிகாரம்மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுதென்னிலங்கையுத்த கதாநாயகர்கள் இராணுவத் தளபதியின் தலைமையையும் முப்படைத்தளபதிகளின் பலத்தையும் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் அரசியல் தலைமையும் இப்பிணக்குகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. அரசின் இனப்பிரச்சினை தொடர்பான இராணுவ அணுகுமுறைக்கு ஏற்பட்ட தோல்விகளுக்கெல்லாம் தளபதிகளின் தலைகளில்சுமத்தப்பட்டன. அதனை நியாயப்படுத்துமாப் போன்றே இராணுவக் கட்டமைப்பிலும் மாற்றங்கள் செய்யப்பட்டன-

இவ்வாறான மாற்றங்களே, 1992ஆம் ஆண்டில்அப்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு மாற்றங்கள் ஆகும். அதாவது ஒப்பரேசன்சிக்ஸர் இராணுவ நடவடிக்கையில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்திடமும் அதன் தலைமை தளகர்த்தா ஜெனரல்ஹமில்டன் வணசிங்காவிடமும் இருந்த அதிகாரங்கள் முப்படைகளின் தளபதிகளிடம் மாற்றப்பட்டது. இது ஏப்ரலில் இடம்பெற்றது. ஆனால், விரைவிலேயே இவ் அமைப்பு மாற்றம்பெற்றது. அராலி கண்ணி வெடித்தாக்குதல், கட்டைக்காட்டு மினி முகாம் தகர்ப்பு என்பவற்றின் பின்னர் மீண்டும் முப்படைத் தளபதிகளிடம் இருந்து கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைத் தளகர்த்தாவிடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டன

ஆனால், இக் காலப்பகுதிக்குள், சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பின் சிதைவு வெளிப்படையாகவே தெரியத்தொடங்கி விட்டது. அதாவது விடுதலைப் புலிகளின் தொடர் தாக்குதலினால், இராணுவ தலைமை என்ன செய்வதெனத் தடுமாறிக்கொண்டிருந்தது. இராணுவத்தில் இருந்து 15,000ற்கும் மேற்பட்ட சிப்பாய்கள் தப்பி ஓடியிருந்தனர். இராணுவம் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை எடுத்தல் என்பதைவிட இராணுவக் கட்டமைப்பை உறுதியாகப்பேணுவதென்பதே முக்கியமான தொன்றாக இருந்தது. அதற்காகப் பெரும் முயற்சிகளும். சலுகைகளும் அறிவிக்கப்பட்டன.

இந் நிலையில் யாழ். குடாநாட்டின் மீது தொடுக்கப்படும் பாரிய தாக்குதல் ஒன்றின் மூலம் இராணுவக் கட்டமைப்பைப் பாதுகாக்க முடியும் என்ற ரீதியில் யாழ். நகரைக் கைப்பற்றுவதற்கான தாக்குதல் திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் இத் தாக்குதல் ஆரம்பிக்க இருதினங்கள் இருந்த நிலையில் இத்தாக்குதலுக்குத் தலைமை தாங்க இருந்த லெப். ஜெனரல் கொப்பேக்கடுவ, மேஜர் ஜெனரல் விஜயவிமலரெட்னா உட்பட ஒன்பது உயர் அதிகாரிகள் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிப் பலியானார்கள்-

சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட இவ்இழப்பே இராணுவத் தலைமையில் ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். ''இவ்விரு அதிகாரிகளும்--லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜயவிமலரட்னா--இல்லாத வடபகுதி யுத்தம் எப்படி இருக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்- கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட இவ்விரு அதிகாரிகளின் இடத்தை நிரப்பக் கூடிய அதிகாரிகள் சிறிலங்கா இராணுவத்தில் இல்லை'' என இவ் இழப்புக் குறித்துக் கருத்து வெளியிட்டஒரு சிரேஷ்ட இராணுவ அதிகாரி அன்றே தெரிவித்திருந்தார். அது பின்னர் ஏற்கக் கூடிய கூற்றுப்போன்றேஅமைந்தது.

இவ்வாறு 1992ஆம்ஆண்டு முடிவுற்றபோது சிறிலங்கா இராணுவம் அவ் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்த கட்டுக் கோப்பையும், இராணுவத் தலைமையின் சீரான படிமுறையையும் இழந்திருந்ததென்றே கொள்ள வேண்டும். அதாவது ஒருஜெனரல், ஒரு லெப். ஜெனரல், நான்கு மேஜர் ஜெனரல் என இருந்த சீரான அமைப்பில் ஒருமேஜர் ஜெனரல்- டென்சில்கொப்பேகடுவ- கொல்லப்பட்டிருந்தார். ஒரு மேஜர் ஜெனரல் இடத்தை நிரப்பக்கூடிய சிரேஷ்ட பிரிகேடியர் விஜய விமல ரெட்னாவும் கொல்லப்பட்டிருந்தார். அத்தோடு மீதமிருந்த இருமேஜர் ஜெனரல்கள் - பாலரெட்னராஜா, ஸ்ரான்லி டி. சில்வா - பதவி விலகத் தயாராகஇருந்தனர்.

இவ் வேளையில் இராணுவக் கட்டமைப்பில் செய்யப்பட்ட மாற்றமானது கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகத்திடம் அதிகாரத்தை ஒப்படைத்திருந்தது. ஆனால் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைத் தளகர்த்தாவோ

## ஜெயராஜ்

தனது 'போர்முனைநம்பிக்கை நட்சத்திரங்களை இழந்து' நின்றார். இந் நிலையில் கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்தினால் அடுத்த கட்டம் பற்றிச் 'சிந்திக்கவே முடியவில்லை எனலாம். அதே வேளை புலிகளும் தமது தாக்குதல்களை குறைத்திருந்தமையால் கூட்டுப்படைத் தலைமையகம் சற்று காலம் தள்ளக்கூடியதாக இருந்தது.

இந்த நிலையில் தான், கடந்த யூலை மாதம் மண்கிண்டிமலை இராணுவ முகாம் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. பெருமளவு ஆயுத தளபாடங்களையும் இராணுவம் இழக்க வேண்டியிருந்தது. இதைத் தொடர்ந்து புதிதாகப் பதவி ஏற்றிருந்த ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா, முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் வழியைப் பின்பற்றி இராணுவக் கட்டமைப்பிலும், அதிகார அமைப்பிலும் மாற்றங்களைச் செய்தார்.

இம் மாற்றமானது சிதைவைநோக்கிச் சென்றுகொண்டிருந்தஇராணுவ கட்டமைப்பிற்கு புத்துயிர் ஊட்டவும், ஜனாதிபதி இனப்பிரச்சினை தொடர்பாக எடுத்த தீவிர போக்கிற்கு ஏற்ப இராணுவ வெற்றியை விரைவில் தேடிக் கொள்ளும் நோக்கம்கொண்டதாகவும் இருந்தது.

ஆனால் இம் மாற்றம் நிகழ்ந்தபோது இராணுவம் எண்ணிக்கையில் 90,000 பேரைத்தாண்டியதாக இருப்பினும் தலைமையில் சீரான ஒழுங்கமைப்பு இருக்கவில்லை என்பதோடுமுரண்பாடுகளும் முற்றிப்போயிருந்தன. 70,000 துருப்புக்கள் இருந்த போது இருந்த ஒரு ஜெனரல், ஒரு லெப். ஜெனரல், நான்குசிரேஷ்டமேஜர் ஜெனரல்கள் என்ற நிலை சிதைந்து ஒரு லெப். ஜெனரல், ஒரு சிரேஷ்ட மேஜர் ஜெனரல் இரு புதிதாக நியமனம்பெற்ற மேஜர், ஜெனரல் என்ற பலவீனமான நிலையில்இருந்தது. ஹமில்டன் வனசிங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலராகச் சென்றமையால் 90,000 ராணுவத்திற்கு ஒரு ஜெனரல் இல்லை என்ற நிலையேஇருந்தது. அத்தோடு இவ்வருடத்தில் கடற்படைத் தளபதியான அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோவையும் சிறிலங்கா ஆயுதப்படை இழந்திருந்தது.

இந்நிலையில் தான் ஒப்பரேசன் யாழ்தேவியில் இராணுவம் பெரும் தோல்வி ஒன்றைச் சந்தித்தது. இத் தோல்வியானது சிறிலங்கா இராணுவத் தலைமைக்கும், அரசியல் தலைமைக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்தது இராணுவத் தலைமை தடுமாறிப் போனது. புலோப்பளையில் இடம்பெற்ற வரலாற்றுச் சமரில் ஏற்பட்ட பேரிழப்பைக் கண்டு அதிர்ந்த இராணுவத் தலைமை அடுத்த கட்டம் குறித்து தீர்மானம் எடுக்க முடியாமல், களத்தில் நின்ற அதிகாரிகளிடம் முன்னேறுவதா? பின்வாங்குவதா? என ஆலோசனைகேட்கும் நிலைக்குச் சென்றது. இறுதியில் பின்வாங்குவதென்றே முடிவெடுத்தது.

இதேவேளை, புதிதாக இராணுவ வெற்றியை எதிர்பார்த்திருந்த அரசியல் தலைமையகம் இராணுவத் தலைமையின் திறமை குறித்துச் சந்தேகம் கொள்ளத் தொடங்கியது. இராணுவத் தளபதியைப் பார்த்து கடமையைச் சரிவரச் செய்யாவிட்டால் பதவி விலகுமாறு கசப்பான வார்த்தைகளை வெளியிடும் அளவிற்குச் சென்றது.

இவ்வாறாக இராணுவத் தலைமை பெரும் நெருக்கடியில் சிக்கித் திணறிய வேளையில் தான் பூநகரி - நாகதேவன் துறை படைத்தளம் புலிகளால் தகர்க்கப்பட்டது, இது இராணுவத் தளபதிக்குப் பேரிடியாகவே இருந்தது, அடுத்த கட்டம் பற்றிச் சிந்திக்க முடியாமல் திணறச் செய்தது. இத் தோல்வியை இராணுவத் தலைமையால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. படையினரில் நூற்றுக் கணக்கானோர் ஒரே நேரத்தில் உயிரிழந்திருப்பது பற்றி உணர்வதே கடினமாகவுள்ளது. அதைவிட இரண்டு டாங்கிகளை ஒரே நேரத்தில் அவர்கள் கைப்பற்றிச் சென்றிருப்பது என்பது நம்புவதே கஷ்டமாக இருக்கின்றது என விசனப்படும் அளவிற்கு இராணுவத் தளபதியின் நிலை உருவாகியிருந்தது.

இதே போன்ற ஒரு பேரதிர்ச்சியே அரசியல் தலைமைக்கும் ஏற்பட்டது அதே வேளை தோல்விக்குப் பொறுப்பேற்று பதவிவிலகுமாறு நிர்பந்தங்கள் இராணுவத் தலைமைக்குக் கொடுக்கவும் தொடங்கியது, இதற்கு தென்னிலங்கை அரசியல் சூழ்நிலையும்நிர்ப்பந்தம் செய்தது. இந்த வகையில் டி. பி விஜேதுங்க அரசாங்கம் தப்பித்துக் கொள்ள இது தவிர வேறுவழி இருக்கவில்லை. ஆனாலும், ஆரம்பத்தில் அரசாங்கத்தின் அழுத்தத்திற்குப் பணிந்துபோகும் நிலையில் இராணுவத் தலைமை இருக்கவில்லை.

ஆனால், அரசியல் தலைமை இராணுவத் தலைமையை நீக்குவதென்ற தனது நிலைப்பாட்டை இறுகவே பற்றிக் கொண்டு செயற்படவும் தொடங்கியது. வழமை போலவே இராணுவத் தலைமைக்குள் இருந்த முரண்பாட்டைப் பயன்படுத்தியது. இராணுவத் தளபதி இருக்கும்போதே வடக்கிற்கென தனியானதொரு இராணுவ கட்டமைப்பையும், கட்டளை இடும் அமைப்பையும் உருவாக்கி அதற்கென அதிகாரங்களையும் வழங்கியது. இராணுவத் தலைமைமீது பகிரங்க தோல்விக்கான குற்றச்சாட்டை சுமத்த முற்பட்டது.

இதன்மூலம், சிறிலங்கா இராணுவத்தில் என்றுமில்லாதவாறு இரு இராணுவக் கட்டமைப்பும், அதிகார பீடமும் உருவாக்கப்பட்டது. இது இராணுவத் தலை

(10ஆம் பக்கம் பார்க்க)

## சாரணர் கூட்டம்

யாழ் மாவட்ட சாரணர்கள், திரிசாரணர்கள், சாரண தலைவர்கள், சாரண உத்தியோகத்தர்களுக்கான 'விசேட கூட்டம்' கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று பி.ப 4.00 மணிக்கு நடைபெற உள்ளது இக் கூட்டத்தில் சாரணியம் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்துகொள்ளும்படி யாழ் மாவட்ட ஆணையாளர் இ மகேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கடல்வள அபிவிருத்திக்குழு செயலகத்தில் ஆரம்பம்

யாழ். மாவட்ட கடல்வள அபிவிருத்திக்குழு ஒன்று நேற்று யாழ் செயலகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் கடல் வளத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் உருவாக்கப் பட்டுள்ள இக் குழுவின்தலைவராக யாழ். அரசாங்க அதிபர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும் உதவி அரசாங்க அதிபர்கள், கடற் தொழில் ஒன்றிய தலைவர், திட்டப் பணிப்பாளர், உதவி திட்டப் பணிப்பாளர், மாவட்டபிரதி ஆணையாளர், சீநோர், கூட்டுறவு உதவி ஆணையாளர், மக்கள் வங்கி உத்தியோகத்தர் ஆகியோர் இக் குழுவில் அங்கம் வகிப்பர். (ச)(சி)

## பூநகரி படையினரின் சம்பளம் கிடைக்கவில்லை

### பெற்றோர்கள் புகார்

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாம் தாக்குதலின் போது காணாமல் போன இராணுவத்தினரின் சம்பளப் பணம் வழக்கம் போல தங்களுக்கு வழங்கப் படவில்லை என்று காணாமல் போன இராணுவத்தினரின் பெற்றோர் புகார் தெரிவித்துள்ளனர்.

கடந்தமாதம் இடம்பெற்ற இத்தாக்குதலை அடுத்து காணாமல் போனோர் எனக் கருதப்படும் படையினரின் சம்பளப்பணம் அனுப்பி வைக்கப்படாமைக்கான காரணம் என்ன என்று பெற்றோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

காணாமல் போனவர்கள் எனக் கருதப்படும் படையினரை மீட்பதற்கும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**09- 12 -93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11645

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:

இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-5964, 26-1321, 24-6855, 27-1122 24-5703
41-7041, 41-9111, 24-8391, 42 9625

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

யாழ்நகர் **ஸ்ரீதர்** திரையரங்கில்

**"BIG BOSS"**

(சிறந்த கராட்டிப் படம்)

தினசரி பி.ப. 4.00 மணி, மாலை 6.00 மணி
சனி, ஞாயிறு காலை 10.30, பி.ப. 2.30, 4.00
மாலை 6.00 மணி (சி-8049)



### 3ம் ஆண்டு நினைவலைகள்



**ஆறுமுகம் குணரத்தினம், L. L. B**

Attorney - At - Law

[உதவிப் பதிவாளர் யாழ். பல்கலைக் கழகம்]

தோற்றம்: **18-3-1948**

மறைவு: **10-12-1990**

திதி: **7. 12. 93**

என்றும் எங்கள் நினைவில் வாழும்
அன்பு அப்பாவே. உங்கள்
ஆத்மா சாந்தி அடைய என்றும்
இறைவனை இறைஞ்சுகிறோம்.

கைலாயபிள்ளை வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

அன்பு மனைவி, பிள்ளைகள்

(5078)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### கலந்துரையாடல்

வடமராட்சிக் கோட்ட தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் இன்றுமுற்பகல் 10.00 மணிக்கு வடமராட்சி மாலுசந்தியில அமைந்துள்ள சுதா பொன்ஸ் கல்வி நிறுவனத்தில் நடைபெற உள்ளது.

### சிறிலங்கா

மையை அவமதிக்கும் நோக்கில் செய்யப்பட்டது இதற்கு சிரேஷ்ட இராணுவத் தளபதிகளில் கடைசித துரும்பாக இருந்த மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா பயன்படுத்தப் பட்டுள்ளார். இந் நிலையில், அதிகாரம் இழந்த ஒரு தளபதியாக இருப்பதைவிட இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைததிய ரெட்னா பதவி விலகுவதைத் தவிர வேறு வழி இல்லாமல் செய்யப்பட்டது. இதனையும் மீறி இராணுவத் தளபதி பதவியை பிடித்துக்கொண்டிருக்க முயற்சி செய்திருப்பாரேயானால், பூநகரி இழப்பு தொடர்பான விசாரணை கமிஷன் முன் அவர் சாட்சியம் அளிக்கவேண்டிய நிலை உருவாகியிருப்பினும் ஆச்சரியப்பட ஏதும் இருந்திருக்காது.

மேலும் பூநகரித் தோல்வியானது உயர் நிலைத் தளபதியை மட்டும் சிக்கலுக்குள்ளாக்கவில்லை. வடபகுதிக்குப் பொறுப்பாக இருந்த மேஜர் ஜெனரல ரோகான் தலுவத்தையையும், மற்றும் சிரேஷ்டபிரிகேடியரானயாழ் மாவட்டத்தளபதி நமுனியையும் தீவுப்பகுதி - பூநகரி என்பனவற்றிற்குப் பொறுப்பாக இருந்த கேணல் நிசாந்த கொட்டக்கொட ஆகியோரையும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது. இவர்களின்நிலை இன்னும் உறுதிப் படவில்லை. ஆயினும் பதவி விலகலா? அன்றி விசாரணைக்கு முகம்கொடுக்க வேண்டுமாஎன்றநிலையிலேயேஅவர்கள் உள்ளனர். அதாவது இராணுவக் கட்டமைப்பு சீரழிவு இரண்டாவது நிலை அதிகாரிகள் வரை சென்றுள்ளது

இந் நிலையில் இராணுவத் தளபதியாகவும் லெப் ஜெனரலாகப் பதவி உயர்வு பெறப் போகும் ஜெரிசில்வா, தனது இளைய மேஜர் ஜெனரல் ஒருவருடனும் - மற்றவர் பற்றி தற்பொழுது முடிவு கூற முடியாது- தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வந்துள்ள 90,000 இராணுவத்தினருடனும், அரசியற் தலைமையில் மிக வேகமான சிந்தனைகளை நிறைவேற்றி முடிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றார். அதாவது ''யுத்தத்தின் கதாநாயகர்களை'' இழந்துவிட்ட சிறிலங்கா இராணுவத்திற்கு ஓய்வு கால சேவையில் இருக்கும் ஜெரிசில்வாவால் யுத்தத்தில் கதாநாயகனாக தோன்றமுடியுமா? என்பதே இன்றுள்ள முக்கிய கேள்வி. மேலும், முதியவர்களில் ஜெரிசில்வாமட்டுமல்லாமல் மேஜர்ஜெனரல்களான சில முதியவர்களின்வாரிசுகள் இராணுவத்தில் நிரம்பவேஉள்ளார்கள். அவர்கள் புதிய தளபதியை நிம்மதியாகப் பதவி வகிக்க விடுவார்களா? இராணுவ கட்டமைப்பை சீர்படுத்த அனுமதிப்பார்களா என்பது அடுத்த சிக்கலாகும்.

### பரீட்சை

மகஜரை அனுப்பிவைத்துள்ளனர்.

பரீட்சை ஆரம்பமான அன்று பரீட்சை நடந்துகொண்டிருக்கையில் இரண்டு புக்காரா விமானங்கள் அப்பகுதியைச் சுற்றி வட்டமிட்ட. பின்னர் குண்டு வீச்சை மேற்கொண்டன. இதனால் பரீட்சை எழுதிக்கொண்டிருந்த மாணவர்கள் தொடர்ந்தும் பரீட்சை எழுதிக்கொள்ள முடியாத நிலையில் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டனர். எனவே இதுபோன்ற கண்மூடித்தனமான தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று அந்த மகஜரில் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலும் அன்றையதினம் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சால் ஒரு மாணவன் உட்பட நான்குபேர் காயப்பட்டனர். பல வீடுகள் சேதங்களுக்கு உள்ளாகின என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வடமராட்சி

ந்த எறிகணையினால் மூன்று மாடுகள் இறந்தன. ஏனையவை தோட்ட வெளிகளில் வீழ்ந்து வெடித்ததால் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இதேவேளை நேற்று முன்தினம் இரவுவல்வெட்டிததுறை பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணையினால் ரவீந்திர ராசா - விக்கினேஸ்வரன் (12), சிவகுரு தியாகராஜா (58) ஆகியோரும் காயம் அடைந்தனர். மேலும் கம்பர் மலை நவிண்டில் பகுதியிலும் எறிகணைகள் வீழ்ந்துவெடித்ததில் வீடுகள் சேதமடைந்தன. (யோ)

### புதிய

யால் பொருள்கள் இறக்கும் பணி மந்தநிலையை அடைந்திருந்தது அறிந்ததே இதனை அடுத்தே யாழ். அரச அதிபர் எடுத்த தீவிர முயற்சியின் பயனாக இரு இழுவைப் படகுகளை அனுப்ப ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

இவ் இரு இழுவைப் படகுகளும் அடுத்து வரவுள்ள கப்பல்களில் அனுப்பிவைக்கப் படும் என அரச அதிபர் அனுப்பிய செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ச)(சி)

### பூநகரி

மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் ஜாலியா நமுனி, ஊர்காவற்துறை பொறுப்பதிகாரி கேணல் நிசாந்தா கொட்டேகொட ஆகியோர் இராணுவ நீதிமன்றத்தால் விசாரிக்கப்படுவர் எனவும், இம்மூவரையும் இராணுவத் தளபதி சிசில் பூநகரி அழிவுக்கு பொறுப்பென கூறியுள்ளதை தொடர்ந்து அவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெறலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது,

### மோட்டார்

அனுமதி வழங்கும் அலுவலகத்திலும், தங்கள் ஊர்திகளைப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும், பரிசோதனைக்கு வரும் போது தத்தமது குடும்ப பதிவு அட்டையையும், ஸ்ரீலங்காவால் வழங்கப்பட்ட மூல ஆவணங்கள் இருப்பின் அவற்றையும் எடுத்து வருமாறு மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

### பாதுகாப்பு

மனைப் பகுதியிலும் பாதுகாப்பு வலயத்தினுள்ளும் சில எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. அதன்போது அப்பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த ஆஸ்பத்திரி பாதுகாப்பு ஊழியர்களும் தொண்டர்களும் மயிரிழையில் உயிர்தப்பிக் கொண்டனர். மேலும் இரு எறிகணைகள் நகரின் வடபகுதியில் வீழ்ந்து வெடித்தன.

### மத்திய

ஏற்கக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதா? எதிர்ப்பதா என்பது குறித்து தாம் எந்த முடிவையும் இதுவரை எடுக்கவில்லை என இ. தொ. கா. உறுப்பினரும், மத்திய மாகாண சபையின் கல்வி அமைச்சருமான சதாசிவம் தெரிவித்தார்.

இவ் நம்பிக்கையில்லா பிரேரணை 20ஆம் 21ஆம் திகதிகளில் விவாதிக்கப்பட உள்ளது.

### சமூக

பட்சத்தில் சமூக சேவைப் பிரிவை செயற்பட விடாது மறியல் செய்யப்போவதாகவும் மேற்படி சபை முன்னர் அறிவிப்பு ஒன்றை விடுத்து காலஅவகாசம் வழங்கியிருந்தது தெரிந்தது.

இதற்கு சமூகசேவை உதவி பணிப்பாளர், அரச அதிபர் இக்கொடுப்பனவு தொடர்பாக திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதாகவும் அவர் யாழ். திரும்பும் வரை போராட்டத்தைக் கைவிடும்படியும் எழுத்து மூலம் கேட்டிருந்தார்.

இது தொடர்பாக ஆராயுமுகமாக நேற்று கூட்டுறவு சபை மண்டபத்தில் கூடிய கூட்டத்திலேயே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது இதில் சமூகசேவைகள் பிரதிப்பணிப்பாளரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதுடன் கடந்த மார்ச் 93 வரையான காலப் பகுதிக்கு மட்டும் சமூகசேவைகள் பிரிவு 5கோடி ரூபா தர வேண்டியுள்ளது. இதனால் தமது செயற்பாடுகள் பெருமளவில் முடங்கியுள்ளதாகவும், தமது செயற்பாட்டை மேற்கொள்வதற்கு வசதியாக புனர்வாழ்வுப் பகுதியில் இதற்குப்பதிலாக கடன்திட்டமொன்றை சமூக சேவைகள் உதவிப்பணிப்பாளர் எதிர் வரும் 13-ம் திகதிக்கு முன்னர் ஏற்படுத்தித்தரல் வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் 14-ம் திகதி காலை முதல் சமூக சேவைகள் பிரிவை இயங்கவிடாது மறியல் போராட்டம் நடாத்துவது எனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இம்மறியல் போராட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள 22 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினதும் தலைவர்களும் பொதுமுகாமையாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர் எனத் தெரியவருகிறது. (ச, சி)